
வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 06.02.2023 திங்கட்கிழமை | இதழ் : 59 | பக்கங்கள் : 12


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# அரசியல் தீர்வு ஏற்படாவிட்டால் எமது தாயகம் பறிபோய்விடும்!



## மூத்த தலைவர் இரா. சம்பந்தன்

கொழும்பு, பெப்ரவரி 06

"அரசியல் தீர்வு ஏற்படாவிட்டால் எங்களுடைய தாயகம் - சரித்திர ரீதியாக எமது தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த பிரதேசங்கள் படிப்படியாக அபகரிக்கப்பட்டு விடும். எனவே, உடனடியாக அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்."

11




தைப்பூச நன்னாளான நேற்று உலகப் பெருமஞ்சம் என்று சிறப்பிக்கப்படும் திருமஞ்சத்தில் இணுவில் கந்தன் ஆலய கந்தப்பெருமான் வலம்வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (படம் - ஐ. சிவசாந்தன்)

## ரூ. 334 ஆல் எகிறியது எரிவாயு



கொழும்பு, பெப். 06

லிட்ரோ சமையல் எரிவாயுவின் 12.5 கிலோ சிலிண்டரின் விலை 334 ரூபாயால் அதிகரிக்கப்பட்டதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

இதேபோன்று 5 கிலோ சிலிண்டரின் விலை 134 ரூபாயாலும் 2.3 கிலோ சிலிண்டரின் விலை 61 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, 12.5 கிலோ எரிவாயு 4,743 ரூபாயாகவும், 5 கிலோ எரிவாயு 1904 ரூபாயாகவும், 2.3 கிலோ எரிவாயு 883 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இந்த விலை அதிகரிப்பு நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வந்தன. (ஐ)

### குருந்தூர்மலை காணி விவகாரம்:

## ஜனாதிபதி ரணிலின் உத்தரவு நிறைவேற்றாமல் இழுத்தடிப்பு!

முல்லைத்தீவு, பெப். 06

குருந்தூர்மலையில் அமைக்கப்படும் விகாரைக்காக 6 ஏக்கர் தவிர தொல்பொருள், வன வளத் திணைக்களங்களால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டும் அதனை செயல்படுத்த இரு திணைக்களங்களும் இதுவரை எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

குருந்தூர்மலையில் அமைக்கப்படும் விகாரைக்காக ஆறு ஏக்கர் காணியை வைத்துக் கொண்டு ஏனையவற்றை மக்களிடம் கையளிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டிருந்தார். கடந்த ஆண்டு

11

## சிறுபான்மை கட்சிகளின் சந்திப்பு இந்த வாரத்தில்!

கொழும்பு, பெப். 06

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ் முற்போக்கு கூட்டணி, சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் பிரதிநிதிகள் சந்திப்பு ஒன்று இந்த வாரம் நடைபெறவுள்ளதாக அறிய வருகிறது.

இந்த வாரம் பாராளுமன்ற கூட்டத்தொடர் ஆரம்பமாகிறது. இதன்போதே இந்த சந்திப்பும் நடைபெறும் என்று அறிய வருகிறது.

இந்த சந்திப்பில் சிறுபான்மை இனங்களான தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் எதிர்கொள்ளும் பொதுப்பிரச்னைகள் தொடர்பில் கூட்டிணைவாக செயல்படுவது குறித்து ஆராயப்படவுள்ளது.

இதன் முதல்கட்டமாக மனோ கணேசன், சுமந்திரன், ஹக்கீம் ஆகியோர் அண்மையில்

11

## தாவடியில் நேற்றிரவு விபத்து இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

### மற்றோர் இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம், பெப். 06

வானும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொரு இளைஞர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றிரவு 7 மணியளவில் காங்கேசன் துறை வீதி, கொக்குவில் - தாவடி பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில், ஓட்டுமடத்தை அனோஜன் (வயது -19) என்ற இளைஞனே யாழ்ப்பாணம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். அத்துடன், தாவடியை சேர்ந்த ரகுசன் (வயது-17) என்பவர் யாழ். போதனா மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

யாழ்ப்பாணம் பொலிஸார் இந்த விபத்துக் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ரூ. 77 கோடியை விடுவிக்குமாறு தேர்தல் ஆணைக்குழு கோரிக்கை!

கொழும்பு, பெப். 06

மார்ச் 9ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக 77 கோடி ரூபாயை விடுவிக்குமாறு தேசிய தேர்தல் ஆணைக்குழு நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா, நிதி அமைச்சின் செயலாளரிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் 9ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஆரம்ப செலவினங்களுக்காக 77 கோடி ரூபாய் தேவைப்படுவதாக ஆணைக் குழு மதிப்பிட்டுள்ளது.

11

## தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமையே இந்திய விருப்பம்!

### மாவை சேனாதிராசா

யாழ்ப்பாணம்,பெப். 06

தமிழ்த் தேசிய கட்சிகளை இந்தியா பிரித்து செயல்பட விரும்பவில்லை. ஒற்றுமையுடன் இருப்பதைத்தான் விரும்புகின்றார்கள். இதனை, ஊடகங்கள் கேள்விகளாக்குவதும் அதற்கு பதில்கள் கூறுவதும் சிறந்த விடயமல்ல என்று இலங்கை

11

## ராஜபக்ஷ அடிமைத்தனத்தில் இருந்து மக்களை மீட்போம்!

### சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, பெப். 06

ராஜபக்ஷவின் அடிமைத்தனத்தை இன்னமும் உறுதிப்படுத்தும் மொட்டு - யானை அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கான முதல் நடவடிக்கை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்றதன் பின்னர் ஆரம்பிக்கப்படும்.

11

உள்ளூராட்சி சபை தேர்தல் - 2023
தமிழ் தேசிய கூட்டமைப்பு
தமிழின ஆன்மாவின் ஒருமித்த சின்னம்!
ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி
கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது...!

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் வி. ஆனந்தசங்கரி ஐயாவை அண்மையில் சந்தித்த போது, 'ஏனடா தம்பியவை ஈழநாடு பேப்பரிலை என்னைப் பற்றி நல்லாவும் எழுதுறியள் இல்லை, கூடாமலும் எழுதுறியள் இல்லையே' என்று கூறினார்.

அவரைப் பற்றி இரண்டு விதமாக எழுதுவதென்றாலும் பல நாட்களுக்கு இந்தப் பத்தியை எழுதிக்கொண்டே இருக்கலாம்.

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனமான யுனெஸ்கோ நிறுவனத்தால் சகிப்புத்தன்மையை பேணுதல் மற்றும் வன்முறைக்கு எதிரானவர்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதைப் பெற்ற ஒரே யோர் இலங்கையர் என்ற பெருமையைப் பெற்றவர்.

கிளிநொச்சி இன்று தனி மாவட்டமாக இருப்பதற்கு காரண மான ஒரோயொருவர். கிளி நொச்சி தொகுதியில் இரண்டு தட வைகள் எம். பியாக இருந்தவர். யாழ்ப்பாண மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினராக ஒரு தடவை பதவியில் இருந்தவர்.

தன்னுடைய இளமைக்காலத் தில் லங்கா சமசமாஜக் கட்சியில் இணைந்து அரசியல் நடவடிக் கையில் ஈடுப்பட்டு வந்த ஆனந்த சங்கரி பின்னர் ஜீ. ஜீ. பொன்னம் பலத்தின் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் இணைந்து கிளிநொச்சி எம்.பியானார். பின் னர் காங்கிரஸ் கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய போது, அதில் முக்கிய தலைவராக இருந்தவர். இன்றுவரை தனக்கு எது சரி என்று படுகின்றதோ அதனை எந்தக் கட்டத்திலும் விட்டுக்கொடுக்காமல் இருப்பவர். அதனால்தான் அவர் இன்றுவரை தனித்து நின்றுகொண்டிருக்கிறார். மற்றைய தலைவர்கள் போல 'வளைந்து' கொடுக்கத் தெரிந்தி ருந்தால் இன்றும் அவர் முன்னணி தலைவராக வலம் வந்திருப்பார்.

அவரைப் பற்றி எதற்காக இப்படியெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கின்றேன் என்று நீங்கள் நினைக்கலாம்.

சில வருடங்களுக்கு முன்னர், கிளிநொச்சியில் ஒரு விழாவுக்கு அவருக்கு அழைப்பு கிடைத்தது.

இராணுவத்தினர் வசமிருந்த காணிகளை விடுவித்து, அவற்றை அந்தக் காணிகளின் சொந்தக்காரர் களுக்கு கையளிப்பதற்கான வைபவம் அது. கிளிநொச்சியின் மூத்த அரசியல் தலைவர் என்ற வகையில் ஆனந்தசங்கரியை அந்த விழாவில் கலந்துகொள்ள வேண்டும் என்ற அழைப்பு அது.

அந்த விழாவுக்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்த இராணு வத்தினரின் முக்கிய அதிகாரி ஒருவர் நேரில் சென்று அந்த அழைப்பிதழை வழங்கினார்.

ஆனந்தசங்கரி கேட்டார், 'காணி இல்லாத மக்களுக்கு புதிதாகக் காணிகளை வழங்குகின்றீர்களா?' என்று.

அதற்கு அந்த அதிகாரி, 'இல்லை ஐயா, நாங்கள் இதுவரை பயன்படுத்தி வந்த காணிகளை விடுவிக்கிறோம். அவ்வாறு விடுவிக்கின்றபோது ஏற்கனவே அந்தக் காணிகளின் சொந்தக்காரர் களாக இருந்தவர்களிடம் அதனை கையளிக்கப்போகின்றோம்' என்றிருக்கிறார்.

அதற்கு ஆனந்தசங்கரி சொன்னது:

'அவர்களின் காணிகளை அவர்கள் உங்களுக்கு தந்தார்களா? நீங்கள் பாவியுங்கள் என்று. இல்லையே. யுத்தம் நடத்தி அவர்கள் இருந்த இடங்களை நோக்கி குண்டுத் தாக்குதல்களை நடத்தி அவர்களை அங்கிருந்து வெளியேற வைத்துவிட்டு, அவர்களின் காணிகளில் நீங்கள் இவ்வளவு காலமும் அடாத்தாக ஆக்கிரமித்து வைத்திருந்துவிட்டு, இப்போது அதிலிருந்து வெளியேறுகின்றபோது, அதற் காக பல இலட்சம் ரூபாய் செலவு செய்து விழா வைத்து அவர்களின் காணிகளை அவர்களிடமே கையளிப்பதற்கு எதற்கு இந்த விழா? நீங்கள் ஆக்கிரமித்தது போலவே அதிலிருந்து வெளியேற வேண்டி யதுதானே. காணி உரிமையாளர் கள் தமது காணியி லிருந்து வெளியேறியதுபோல மீண்டும் காணிகளுக்கு வருவார்கள்தானே?'

இராணுவ அதிகாரி மீண்டும் கைலாகு கொடுத்துவிட்டு சென்றுவிட்டார்.

பலாலியில் நூற்று எட்டு ஏக்கர் காணியை விடுவிப்பதற்காக அண்மையில் நடந்த வைபவம் ஒன்றைப் பார்த்தபோது இந்தச் சம்பவம்தான் ஞாபகத்துக்கு வந்தது.

அதிலும் கொடுமை, காணிகளை உத்தியோகபூர்வதாக யாழ். மாவட்ட இராணுவ தளபதி யாழ். மாவட்ட செயலாளரிடம் கையளிக்கின்றபோது, மேடையில் ஆசனங்களில் அமர்ந்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவும், சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளு மன்ற உறுப்பினரும் தாங்கள் அமர்ந்திருந்த ஆசனங்களில் இருந்தவாறே கைகளை தட்டி அதனை வரவேற்க, சந்தோச மிகுதியில் தமிழ் தேசிய கட்சி ஒன்றின் பாராளுமன்ற உறுப்பினர் தனது ஆசனத்தில் இருந்து எழுந்து நின்று வரவேற்று கைகளைத் தட்டிக்கொண்டிருந்தார்.

இதிலும் சிறப்பு. இது இராணுவம் உத்தியோகபூர் வமாக மாவட்ட செயலரிடம் கையளிக்கும் நிகழ்வுதான். விரைவில் மற்றுமொரு விழாவில் காணி உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவிருக்கின்றதாம்.

தொண்ணூறு வயதை நெருங்கிக்கொண்டிருக்கும் ஆனந்தசங்கரிக்கு இருக்கின்ற அரசியல் 'செருக்கு', ஐம்பதுகளின் பிற்பகுதியில் இருந்துகொண்டிருக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கு இல்லை என்று சொல்லாமல் இருக்கவும் முடியவில்லை.!

**- ஊர்க்குருவி**

# கிழக்கு நோக்கிய பேரணியின் 2ஆம் நாள் பதிவுகள்









ஈழநாடு
Eelanadu
06.02.2023 திங்கட்கிழமை
பிலவ வருடம், தை 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ரணிலால் முடியுமா - நம்பலாமா?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றியிருக்கும் உரை சிறப்பானது. இதற்கு முன்னிருந்த ஜனாதிபதிகள் எவரும் இவ்வாறானதோர் உரையை நிகழ்த்தியதில்லை. சில விடயங்களை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக் கொண்டிருக்கின்றார். கடந்த காலத்தில் ஆட்சியாளர்கள் தவறிழைத்திருக்கின்றனர் எனக் கூறியிருக்கின்றார். சில விடயங்களை வெளிப்படையாக பேசியிருக்கின்றார். ஆனால், நிரந்தரமான அரசியல் தீர்வு பற்றி உறுதியான விடயங்களை ரணில் பேசவில்லை.

ஆனால், ரணில் விக்கிரமசிங்க கூறுகின்ற விடயங்கள் இடம்பெறுமா? ரணில், சொல்லும் விடயங்களை நிறைவேற்றுவதில் எந்தளவு உறுதியாக இருக்கின்றார்? அவரால் உறுதியுடன் இருக்க முடியுமா? ரணில் விக்கிரமசிங்க அடிப்படையில் ஒரு சிங்கள அடிப்படைவாதியல்ல - அதேவேளை, இனவாதியுமல்ல. ஆனால், தென்னிலங்கை அரசியலின் பொதுப் போக்குடன் ஒத்துப்போன ஒருவர்தான். தமிழர்களின் நியாயங்களை மறுப்பதுதான் தென்னிலங்கை அரசியலின் பொதுப் போக்காகும். இந்தப் பொதுப் போக்கை எதிர்த்து நின்ற ஓர் அரசியல்வாதியாக ரணில் ஒருபோதும் இருந்ததில்லை. இந்தப் பின்புலத்தில் நோக்கும்போது, ரணில் கூறும் விடயங்களை முழுமையாக நம்பக்கூடிய சூழல் இன்னும் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படவில்லை.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் சந்திரிகா குமாரதுங்க சில விடயங்களை துணிகரமாக முன்னெடுக்க முற்பட்டிருக்கின்றார். அப்போது, ரணில் அதனை ஆதரித்து செயல்படவில்லை என்னும் குற்றச்சாட்டு உண்டு. கடந்த காலத்தைக் கருத்தில்கொண்டு நோக்கினால், ரணிலை நம்பமுடியுமா என்னும் கேள்வி நியாயமானதுதான். அதேவேளை ஏதோவொரு வகையில் விடயங்களைக் கையாள வேண்டிய பொறுப்பும் தமிழர்களுக்கு உண்டு. தமிழர்களின் அதிருப்திகளை காண்பிப்பதற்கு எதிர்ப்பு அரசியல் ஓர் அடையாளப்படுத்தலாக இருக்கலாம். ஆனால், அத்துடன் விடயங்கள் முடிந்துவிடப் போவதில்லை. ஏனெனில், இன்று காண்பிக்கப்படும் அடையாள எதிர்ப்புகள் எவையுமே தமிழ் மக்களுக்கு புதியதல்ல. உண்மையில், தமிழ் தேசிய அரசியலில் இன்று நடக்கும் நிகழ்வுகள், மேடைப் பேச்சுகள் அனைத்துமே அரசியலில் கையா லாகாமல் ஏற்பட்டு தோற்றுப்போன வழிமுறைகள்.

உதாரணமாக சுதந்திர தினத்தின்போது, கறுப்புக் கொடி காண்பிப்பது, கடையடைப்பது, உள்ளக சுயநிர்ணயம் நிராகரிக்கப்பட்டால் வெளியக சுயநிர்ணத்தை நோக்கி செல்ல நேரிடுமென்று எச்சரிப்பது, சமஷ்டி பற்றிப் பேசுவது, இவ்வாறான விடயங்கள் அனைத்துமே செல்வநாயகம் காலத்தில் கையாளப்பட்டு தோற்றுப் போன விடயங்களாகும். அந்தத் தோல்வியை சமாளிக்கும் நோக்கில்தான், செல்வநாயகம் தனிநாட்டு சுலோகத்தை கையிலெடுத்தார். அப்போதும் அதன்மீது எந்தவோர் உறுதியான நம்பிக்கையும் செல்வநாயகத்திடம் இருந்திருக்கவில்லை. இதன் காரணமாகத்தான் அமிர்தலிங்கம் மாவட்ட சபையை நோக்கிச் செல்ல நேர்ந்தது. தனிநாட்டு சுலோகத்தைப் போகிற போக்கில்தான் செல்வநாயகம் முன்வைத்தார். அதிர்ஷ்டக் காற்று வீசினால் பார்ப்போமென்னும் எண்ணத்தில்தான் செல்வநாயகம் தனிநாட்டுக் கோரிக்கையை நோக்கி சாய்ந்தாரென்னும் உண்மை அமிர்தலிங்கத்துக்கு தெரியும். இதன் காரணமாகத்தான் மாவட்ட சபையை நோக்கியும் அமிர்தலிங்கத்தால் சிந்திக்க முடிந்தது.

ரணில் ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என்பதைத் தெளிவாகக் கூறிவிட்டார். இந்தப் பின்புலத்தில்தான் அண்மைக்காலமாக 13ஆவது திருத்தம் தொடர்பில் கூறிவருகின்றார். ஆனால், அந்த விடயத்தை செய்வதற்கும் ரணில் துணிகரமான முடிவுகளை மேற்கொள்ளளளளளளளளளளளளளளளளளளளள க்கூடிய அரசியல் தலைவராக அவதாரமெடுக்க வேண்டும். தென்னிலங்கையின் பாரம்பரிய சிங்கள அரசியல்வாதிகளிலிருந்து அவர் மாறுபட வேண்டும். சிங்களத்தின் பொதுப் போக்குகளை உடைக்க வேண்டும். இதனை ரணிலால் செய்ய முடியுமென்றால் மட்டுமே அவர் கூறுவது ஓரளவாவது நடைபெறும்.

# பொது பயன்பாடு ஆணைக்குழு புதிய உறுப்பினராக டக்ளஸ்!

கொழும்பு, பெப். 06

இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் உறுப்பினராக அரச நிர்வாக சேவை அதிகாரி டக்ளஸ் நாணயக்கார நிதியமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.

2023.07.16 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் உறுப்பினராக பதவி வகித்த மொஹான் சமரநாயக்க, யு. ஏ. விக்கிரமசிங்க ஆகியோர் கடந்த 03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிகளில் இருந்து விலகினார்.

இதையடுத்து, உறுப்பினர் பதவிகளுக்கு ஏற்பட்ட வெற்றிடங்களில் ஒன்றுக்கு அரச நிர்வாக சேவை அதிகாரி டக்ஸஸ் நாணயக்கார நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமன பத்திரத்தை நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் கே. எம். மகிந்த சிறிவர்த்தன, அரச நிர்வாக சேவை அதிகாரி டக்ளஸ் நாணயக்காரவுக்கு நேற்று (5) அனுப்பி வைத்துள்ளார்.

இந்த நியமன பத்திரத்தின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர், இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் நிறைவேற்று சபைக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ)

## பொலிஸ் திணைக்களத்துக்கு ஜப்பான் வாகனங்கள் அளிப்பு

கொழும்பு, பெப். 06

பொலிஸ் திணைக்களத்தின் பயன்பாட்டுக்காக ஜப்பான் அரசாங்கம் 150 மோட்டார் சைக்கிள்கள், 74 வான்கள், மினி பஸ் ஒன்று மற்றும் 115 கண்காணிப்பு உபகரணங்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்த நன்கொடை கையளிக்கப்பட்டது.

இந்த உபகரணங்களை வழங்குவது தொடர்பான ஆவணங்களை ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் டேக்கி ஷூன்சுகே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தார்.

வாகனங்களை பரிசோதித்ததைத் தொடர்ந்து ஜப்பானிய ராஜாங்க வெளிவிவகார அமைச்சருடன் ஜனாதிபதி சுமுக உரையாடலில் ஈடுபட்டதோடு பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸ் மற்றும் பொலிஸாரின் விசாரணை நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்வதற்கும் ஜப்பான் அரசாங்கம் இந்த உபகரணங்களை நன்கொடையாக வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## குஜராத் பல்கலை நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர்!

யாழ்ப்பாணம்,பெப். 06



இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் உள்ள காந்திஜி தேசிய தடயவியல் அறிவியல் பல்கலைக்கழகத்தில் 25ஆவது அகில இந்திய தடயவி யல் அறிவியல் மாநாட் டின் சிறப்பு அதிதியாக வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கலந்துகொண்டார்.

குஜராத்தில் உள்ள உலகில் பிரசித்தி பெற்ற தடயவியல் பல்கலைக்கழகங்களில் ஒன்றாக விளங்கும் காந்தி நகரில் அமைந்துள்ள தேசிய தடயவியல் பல்கலைக்கழகத்தின் 25ஆவது மாநாடு இடம்பெற்றது.

இந்த மாநாட்டை தேசிய தடயவியல் அறிவியல் பல்கலைக்கழகத்தின் தலைவர் நீதிபதி அருண்குமார் மிஸ்ரா தொடங்கி வைத்தார்.

காந்திஜி தேசிய தடயவியல் அறிவியல் பல்கலைக்கழகத்தின் மாநாடு ஒன்றுக்கு அழைக்கப்பட்ட முதலாவது ஆளுநராக வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா விளங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தியின் மேடையில் சந்திம எம். பி.!

கொழும்பு, பெப். 06


ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்புரிமையை பெறும் எண்ணம் இல்லை என்றும் மாபெரும் எதிர்க்கட்சி கூட்டணியை அமைப்பதற்கு பாடுபடவுள்ளார் என்றும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவரவேண்டும் என் பதே தனது நோக்கம் என்றும் தற்போதைய அரசாங்கத்தை தோற்கடிக்க அனைத்து சரியான சிந்தனையுள்ள மக்களும் ஒன்று சேர வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ காலி மாவட்டத்தில் நடத்திய கூட்டத்தில் சந்திம எம். பி. கடந்த சனிக்கிழமை கலந்து கொண்டார். இது தொடர் பாக அவரிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மாபெரும் எதிர்க்கட்சி கூட்டணியை உருவாக்குவதற்கான செயல்பாட்டின் ஒரு பகுதியா கவே தான் ஐக்கிய மக்கள் சக்தியின் மேடையில் ஏறினார் என்றும், மக்கள் எதிர்நோக்கும் பட்டினியை முடிவுக்குக் கொண்டுவர எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாவின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு

பெப்ரவரி - 06 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - தை 23
நல்ல நேரம் : 6.00 - 07.30
ராகு காலம் : 7.30 - 09.00
திதி : பிரதமை




**மேடம்**
உங்கள் எண்ணத்தை பிறரால் புரிந்து கொள்ள முடியாமல் போகும். செயலில் சில சங்கடம் தோன்றும். எதிர்பார்த்தவற்றில் இழுபறி உண்டாகும். உதவி புரிவதாக சொன்னவர்கள் விலகிச் செல்வர்.

**இடபம்**
உங்கள் ஆலோசனைக்கு மதிப்பு ஏற்படும். சொத்து பிரச்னைக்கு தீர்வு காண்பீர்கள். செயல்களில் இருந்த நெருக்கடிகள் விலகும். துணிச்சலாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள்.

**மிதுனம்**
செயல்களில் எதிர்பாராத சங்கடங்கள் ஏற்படலாம். நிதானித்து செயல்படுவது நல்லது. குடும்பத்தினர் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வரவு செலவில் கவனம் தேவை.

**கடகம்**
மனம் மகிழும் வகையில் சில சம்பவங்கள் நடைபெறும். திட்டமிட்டு செயல்படுவீர்கள். சிந்தித்து செயல்படுவீர்கள். செலவுகள் கட்டுப்படும். எதிர்பாராத வரவு உண்டாகும்.

**சிம்மம்**
புதிய திட்டங்களை செயல்படுத்த முயற்சிப்பீர்கள். எதிர்பாராத செலவுகளால் சங்கடப்படுவீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த நன்மையைக் காண முடியாமல் போகும். உங்கள் கவனம் இன்று தடுமாறும்.

**கன்னி**
உங்கள் எண்ணம் நிறைவேறும். இழுபறியாக இருந்த ஒரு முயற்சி லாபமாகும். எதிர்பாராத பண வரவால் சங்கடங்களில் இருந்து விடுபடுவீர்கள். உங்கள் விருப்பம் நிறைவேறும்.

**துலாம்**
குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும். வியாபாரத்தை விரிவு செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். சொத்து வாங்கும் முயற்சியில் தீவிரம் காட்டுவீர்கள். குலதெய்வ அருளால் எண்ணம் நிறைவேறும்.

**விருட்சிகம்**
குடும்பத்தினரின் ஒத்துழைப்புடன் நினைத்தவற்றில் வெற்றி காண்பீர்கள். மற்றவர்களால் முடியாத ஒன்றை முடித்துக் காட்டுவீர்கள். குடும்ப பிரச்னையை லாவகமாக கையாள்வீர்கள்.

**தனுசு**
இன்று நிதானம் அவசியம். யோசித்து செயல்படுவதால் பெரிய சங்கடங்கள் ஏற்படாமல் போகும். உறவுகள் வழியே சில சங்கடங்களை சந்திப்பீர்கள். அலைச்சல் அதிகரிக்கும்.

**மகரம்**
வீட்டிற்காக நவீன பொருட்கள் வாங்குவீர்கள். குடும்பத்தினர் நலனில் உங்கள் கவனம் செல்லும். தம்பதி இடையே இருந்த பிரச்னை தீரும். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயல்படுவீர்கள்.

**கும்பம்**
முயற்சிகளில் ஒன்று வெற்றி பெறும். உங்கள் நிலை உயரும். இதுவரை உங் களை அலட்சியம் செய்தவர்கள் இன்று உங்களைப் பாராட்டுவார்கள். எதிர்பார்த்த ஆதாயத்தை அடைவீர்கள்.

**மீனம்**
வியாபாரத்தில் சங்கடம் அதிகரிக்கும். நினைத்ததை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். உங்களது உடல் நிலையால், செயல்களில் கவனம் செலுத்த முடியாமல் போகும். நண்பர்களால் சங்கடங்களுக்கு ஆளாவீர்கள்.

# இடைத் தேர்தலில் அ. தி. மு.கவுக்கு ஆதரவை அறிவித்தது பா. ஜ. கட்சி!

சென்னை, பெப். 06

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடும் அ. தி. மு. க. வேட்பாளரின் வெற்றிக்கு பா. ஜ. க. பாடுபடும். அத்துடன், பன்னீர் செல்வமும் அ. தி. மு. கவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று தமிழக பா. ஜ. க. தலைவர் கே. அண்ணாமலை அறிவித்துள்ளார்.

சென்னையில் பா. ஜ. க. தலைமை பணிமனையில் அவர் செய்தியாளர்களை சந்தித்தபோதே இதனைத் தெரிவித்தார். தி. மு. கவின் பண பலத்தை எதிர்க்க வேண்டும் என்றால் அ. தி. மு. க. சார்பில் ஒரே வேட்பாளரை நிறுத்த வேண் டும். அவரும் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்பதுதான் பா. ஜ. க. நிலைப்பாடு.

இது குறித்து கடந்த 8 நாள்களாக பன்னீர்செல்வம், பழனிசாமி இருவரிடமும் பலமுறை தொலைபேசியில் பேசியுள்ளேன். இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடும் அ. தி. மு. க வேட்பாளரின் வெற்றிக்கு முழு அர்ப்பணிப்பு உணர்வோடு பா. ஜ. க. கடுமையாக உழைக்கும்.

கூட்டணி கட்சிகளின் உள்கட்சி பிரச்னையில் தலையிடக்கூடாது என்பதே பா. ஜ. கவின் உறுதியான நிலைப்பாடு. அ. தி. மு. கவில் தலைமையை தேர்ந்தெடுப்பது அந்த கட்சி தொண்டர்களின் முடிவு. இதில் பா. ஜ. க. ஒருபோதும் தலையிடாது. 22 மாத தி. மு. க. ஆட்சியில் மக்கள் மன்றத்தில் மிகப்பெரிய அவப்பெயரை சம்பாதித்துள்ளது - என்றார்.

(ஐ)

# அ. தி. மு. கவை இணைக்க பா. ஜ. க. முயற்சி செய்கிறது!

## பொன். இராதாகிருஷ்ணன்

நாகர்கோவில், பெப். 06

அ. தி. மு. கவை இணைக்க பா. ஜ. க. முயற்சி எடுத்து வருகிறது" என்று முன்னாள் மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கன்னியாகுமரியில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த அவர்,

"அரசியல்கட்சிகள் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்பதில் மாற்று கருத்துஇல்லை. கால சூழலுக்கேற்பதான் போட்டியிட வேண்டும். தி. மு. கவும் அ. தி. மு. க. வும் பல இடைத்தேர்தல்களில் போட்டியிடவில்லை.

ஈரோடு இடைத்தேர்தலில் பா. ஜ. க. போட்டியிடுவது குறித்து முடிவெடுக்க மாநில தலைவர் அண்ணாமலைக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது . ஈரோடு தேர்தலில் தி. மு. க. கூட்டணி வேட்பாளர் வெல்வார் என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் எனக் கூறுவதுண்டு. பா. ஜ. கவுக்கு ஊர் ஒன்றுபட்டால் தான் கொண்டாட்டம். இதை உணர்ந்து தான் அ. தி. மு. கவை இணைக்கும் முயற்சியை பா. ஜ. க. மேற்கொண்டு வருகிறது. அதிமுகவை பா. ஜ. க பிளவுபடுத்த முயல்வதாக கூறுகின்றனர். தி. மு. கவிலிருந்து அ. தி. மு. க. உருவாவதற்கு காரணமாக இருந்த பழைய சரித்திரத்தை கூறினால் தி. மு. கவினருக்குதான் அசிங்கம் - என்றார்.

(ஐ)

# கருணாநிதிக்கு நினைவு சின்னம்; எதிர்ப்போர் கருத்தை ஏற்கமுடியாது!

## காங்கிரஸ் கட்சி

சென்னை, பெப். 06

கருணாநிதிக்கு பேனா நினைவுச் சின்னம் எழுப்புவதை எதிர்ப்பவர்களின் வாதம் எந்த வகையிலும் ஏற்கக் கூடியதல்ல என்று காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு தலைவர் கே.எஸ் அழகிரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது ருவிற்றர் பக்கத்தில், 13 வயதில் அரசியலில் பிரவேசம் செய்து 95 வயது வரை தமிழ் சமுதாயத்துக்காக அல்லும் பகலும் அயராது உழைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அவர் எழுத்தாற்றல் மூலம் ஆற்றிய மகத்தான தொண்டை போற்றுகிற வகையில் பேனா வடிவ நினைவுச் சின்னம் அமைக்கப்படவுள்ளது. கடற்கரை பகுதியில் அதிகாலையில் ஆய்வு செய்து அங்கு ஆமைகளோ, மீன்களோ இல்லை என்று அறிக்கை வழங்கியிருக்கிறது.

இராமேஸ்வரத்திலிருந்து தனுஷ்கோடிக்கு ஏறத்தாழ 10 மைல் தொலைவிற்கு கடலில் தான் இருப்புப் பாதை அமைக்கப்பட்டது என்பதைப் புரிந்து கொள்ள ஏன் மறுக்கிறார்கள்?. மலிவான அரசியல்வாதிகளிடம், மலிவான விமர்சனத்தைத் தான் எதிர்பார்க்க முடியும். போற்றுவோர் போற்றட்டும், தூற்றுவோர் தூற்றட்டும்.

வான்புகழ் கொண்ட வள்ளுவனுக்கு 133 அடி உயரத்தில் குமரி முனை யில் திருவுருவச் சிலை அமைத்த கலைஞருக்கு பேனா நினைவுச் சின்னம் எழுப்பு வதை எதிர்ப்பவர்களின் வாதம் எந்தவகையிலும் ஏற்கக் கூடியதல்ல - என்றார்.

(ஐ)

# திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் இலட்சக்கணக்கானோர் தரிசனம்!

திருச்செந்தூர், பெப். 06

திருச்செந்தூர் சுப்பிர மணிய சுவாமி திருக்கோயிலில் ஞாயிற்றுக்கிழமை தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு இலட்சக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

அசுரனான சூரபத்மனை வதம் செய்வதற்கு முருகப் பெருமான் வேல் வாங்கிய விழாவாக கொண்டாடப்படும் தைப்பூசத் திருவிழாவன்று முருகனை தரிசனம் செய்ய திருச்செந்தூரில் இலட்சக் கணக் கான பக்தர்கள் குவிந்தனர்.

இந்த ஆண்டு தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு திருச் செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் அதிகாலை 1 மணிக்கு நடை திறக்கப்பட்டு, தொடர்ந்து பூஜைகள் நடைபெற்றது.

பக்தர்கள் வசதிக்காக சிறப்புப் பேருந்துகளும் இயக் கப்பட்டன. தைப்பூசத் திரு விழாவை முன்னிட்டு கடந்த சில நாட்களாகவே திருச் செந்தூருக்கு மதுரை, விருது நகர், ராமநாதபுரம், தென்காசி, நெல்லை, தூத்துக்குடி மற்றும் குமரி உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்து விரதமிருந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பாதயாத்திரையாக திருச்செந்தூர் வந்து சுவாமி தரிசனம் செய்தனர்.



# 13ஆவது திருத்தச் சட்டம் தமிழர்களுக்கான சவக்குழி!

## நிராகரிக்க வேண்டும் என்கிறார் கஜேந்திரன்



கொழும்பு, பெப். 06

**இந்தியா தனது நலனுக்காக இலங்கையுடன் சேர்ந்து தமிழ் மக்கள் மீது திணித்த கூட்டு சதியே 13ஆவது திருத்தச் சட்டம் இது தமிழர்களுக்கு சவக் குழி மரண பொதி இதை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். தமிழ் தேசமும் இறைமையும் சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி தீர்வு எட்டப்படும் வரை தமிழ் தேசிய மக்கள் முன்னணி தொடந்து குரல் கொடுக்கும் என்று பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.**

மட்டக்களப்பில் நடைபெற்ற போராட்டம் ஒன்றில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பிரித்தானியர்களால் சுதந்திரம் வழங்கப்பட்ட நாள் தமிழர்கள் தம்மைத்தாமே ஆளுகின்ற இறைமை அதிகாரத்தை சிங்கள தேசத்திடம் தாரை வார்த்து 1948 ஆண்டு இதே நாளில் ஆங்கிலேயர் சிங்கள பேரின வாதத்திடம் அடிமைப்படுத்திச் சென்று 75 ஆண்டுகளாக இந்த நாளை தமிழர்கள் இருண்ட கரிநாளாக தொடர்ச்சியாக கடைபிடித்து வருகின்றனர்.

தமிழர்கள் சதந்திரமாக இந்த தீவில் வாழவேண்டுமாக இருந்தால் வட, கிழக்கு தமிழர்களின் தாயகம் அங்கீகரிக்கப்படவேண்டும் தமிழர்களுடைய தேசமும் அதன் இறைமையும் அங்கீகரிக்க வேண்டும் சுயநிர்ணய ஊரிமையுடனான சமஷ்டி தீர்வு வேண்டும் ஒரு புதிய சமஷ்டி அரசியல் அமைப்பு இலங்கைக்கு கொண்டு வரப்படவேண்டும் என்பது 75 வருடங்களாக தமிழர்களின் கோரிக்கையாக இருக்கின்றது.

இலங்கைக்கு 1948 சுதந்திரம் கிடைக்கும் போது இருந்த ஒரே ஒரு தமிழ் கட்சியான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி முதல் முதல் நடந்த தேர்தலிலே ஒற்றையாட்சி அரசியல் யாப்பை நிராகரித்து தேர்தல் விஞ்ஞாபனத்தில் போட்டியிட்டு அதில் வெற்றி பெற்றினர். அன்றைய நாளில் இருந்து இலங்கையில் 1948 ,72, 78 , நிறைவேற்றப்பட்ட ஒற்றையாட்சி அரசியல் யாப்பை தமிழர்கள் நிராகரித்து வந்துள்ளனர்.

பின்னர் தமிழர்கள் ஆயுதம் ஏந்தி தமது தேச அங்கீகாரத்துக்காக போராடியுள்ளனர் 2009 மே 18ஆம் திகதி வரைக்கும் தமிழர்கள் தங்கள் தேசத்தின் இறைமையும் சுயநிர்ணய உரிமை என்ற அங்கீகாரத்துக்காக தியாகம் நிறைந்த உயிர் கொடுக்கின்ற புனித போராட்டத்தை நடத்திவந்தனர்.

2009 மே 18ஆம் திகதி போராட்டம் மௌனிக்கப்பட்ட பிற்பாடு வந்த சுதந்திர தினங்களிலே தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அதன் பேச்சாளர் எம்.சுமந்திரனும் அதில் கலந்து கொண்டு தமிழர் தேசத்தில் புலிகள் அழிக்கப்பட்டதை சிங்களவர்களுடன் சேர்ந்து ஒரு வெற்றி விழாவாக கொண்டாடினார்கள் தமிழ் மக்களை கொன்ற ராஜபஷக்களுக்கு பாராளுமன்றத்தில் பாராட்டு தெரிவித்தனர்.

இன்று அதே தரப்பினர் மக்களால் இனங்காணப்பட்டு மக்கள் முன்னே வரமுடியாத நிலையில் இன்று கூட்டமைப்பு என்றதை தொலைத்துவிட்டு தனித்தனி அடையாளத்துடன் மக்கள் முன்னல் நின்று கொண்டிருக்கின்றனர்.

இலங்கை தீவில் சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்துவதற்கும் இந்தியாவின் நலன்கள் மற்றும் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் பூகோள நலன்களை பேணுவதற்கு 1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்ற பெயரிலே இந்தியாவும் இலங்கையும் கூட்டுசதி செய்து 13ஆம் திருத்தச் சட்டத்தை உருவாக்கினர்.

இதன் மூலம் மாகாணசபை கொண்டுவரப்பட்டது. அதன் அதிகாரம் முழுவதும் ஜனாதிபதியிடம் இருக்கின்றது. அவரால் நியமிக்கப்பட்ட ஆளுநரிடம் இருக்கின்றது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சருக்கோ அமைச்சர்களுக்கோ எந்த அதிகாரமும் இல்லை. மாகாண சபைக்கும் எந்த அதிகாரமும் இல்லை என்பதுடன் காணி, பொலிஸ் அதிகாரம் கிடையாது என்பதுடன் ஜனாதிபதிக்கு முழு அதிகாரமும் என உச்ச நீதி மன்றம் 30 தீர்ப்புக்களில் தெரிவித்துள்ளது.

13ஆவது திருத்தச் சட்டத்தை தீர்வாக வலியுறுத்தி தமிழரசு கட்சி தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் விக்னேஸ்வரன் அணியினர் நிற்கின்றனர் . ஏனையவர்கள் அரசாங்கத்துடன் நின்று கொண்டு ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். இன்று அவர்களும் சுதந்திர தினம் கரிநாள் என்ற பேர்வையில் நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர். ஏனென்றால், ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து ஒற்றையாட்சிக்குள் 13 ஏற்றுக் கொண்டு தயாராகிவிட்டனர். மக்கள் தங்களை இனங்கண்டு கொள்ளக்கூடாது என்பதற்காக ரணிலுக்கு எதிர் போல் நாடகமாடிக் கொண்டுள்ளனர். இதனை மக்கள் தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும்.

இந்தியா தனது பிராந்திய நலன்களை பேணுவதற்காக தமிழர்களை 13ஐ ஏற்றுக் கொள்ளுமாறு நிர்ப்பந்தித்து தமிழர்களை அழிக்கின்ற நடவடிக்கைக்கு தொடர்ந்தும் முயற்சி செய்து கொண்டிருக்கின்றது. இதனை மக்களும் புரிந்து கொள்ளவேண்டும் பல்கலைக்கழக மாணவர்கள் இதற்கு பலியாககூடாது விழிப்படைய வேண்டும் என்பதுடன் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்த வொரு தீர்வையும் ஏற்றுக் கொள்ள முடியாது - என்றார். (ஐ)

# வசந்த முதலிகே விடுதலையால் அரசாங்க தரப்பினர் அதிர்ச்சி!

கொழும்பு, பெப். 06

பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அழைப்பாளர் வசந்த முதலிகேயின் விடுதலை அரசாங்க தரப்பை ஆட்டம் காண வைத்துள்ளதாக கொழும்பு தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற திருமண நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அழைப்பாளர் வசந்த முதலிகே தொடர்பில் உரையாடப்பட்டது.

இந்தத் திருமண நிகழ்வில் அரசாங்கத்தின் மிகவும் சக்தி வாய்ந்த செயலாளர் ஒருவரின் உறவினர் ஒருவருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் பலமான உறுப்பினர் ஒருவருக்கும் தொடர்பு இருந்ததால் அரசாங்கம் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பலர் பங்கேற்றனர்.

தற்போதைய அரசாங்கத்தின் பலமானவர்கள் ஆட்சியில் இருக்கும் வரை வசந்த முதலிகேயால் வெளியே வர முடியாது என்றும் அங்கு இடம்பெற்ற உரையாடல்களின் போது வெளிப்பட்டது.

இதில் ஆச்சரியமான விடயம் என்னவெனில், இவர்களின் உரையாடல்கள் இடம்பெற்று 72 மணி நேரத்துக்குள், சர்ச்சைக்குரிய நீதிமன்ற தீர்ப்புக்கு பிறகு வசந்த முதலிகே விடுதலை செய்யப்பட்டார். இதனால், இந்த வழக்கின் தீர்ப்பு அரசியல் களத்தையே அதிர வைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

(ஐ)

# இறைச்சிக்காக மாடுகள் களவு துன்னாலையில் அதிகரிப்பு!

## கடந்த வாரம் 5 மாடுகள் திருட்டு

வடமராட்சி, பெப். 06

வடமராட்சி துன்னாலைப் பகுதியில் மாடுகள் களவாடப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்று மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த வாரம் மட்டும் 5 மாடுகள் களவாடப்பட்டன. கடந்த வருடம் 50இற்கும் மேற்பட்ட மாடுகள் களவாடப்பட்டன என்று அந்தப் பிரதேசங்களில் வசிப்பவர்களே வடி ரக வாகனத்தில் மாடுகளை திருடி செல்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

களவாடப்படும் மாடுகள் இறைச்சிக்காக களவாடப்படுவதாகவும், களவாடப்படும் சில மாடுகளை அந்த இடத்திலேயே இறைச்சியாக்கி கொண்டு சென்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக பல தடவைகள் பருத்தித்துறை நெல்லியடி பொலிஸ் நிலையங்களிலும் முறைப்பாடு செய்தும் பலன் கிடைக்கவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

மாடுகளை வளர்த்து தமது வாழ்வாதாரத்தை பெருக்கி வரும் மக்கள் வளர்க்கப்படும் மாடுகள் களவாடப்படுவதால் தமது வாழ்வாதாரம் கேள்விக்குறியாக இருப்பதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டனர்.

# கிராமப்புற போக்குவரத்தை விஸ்தரிக்க 50 பேருந்துகள்!

## இந்தியா அன்பளித்தது

கொழும்பு, பெப். 06

நாட்டின் கிராமப்புறங்களில் பொதுப் போக்குவரத்து சேவையை வலுப்படுத்துவதற்காக இந்திய அரசு வழங்கும் 500 பேருந்துகளில் 50 பேருந்துகளை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தார்.

இது தொடர்பான ஆவணங்களை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் நேற்று முற்பகல் கொழும்பிலுள்ள ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியிடம் கையளித்தார்.

இந்திய அரசாங்கத்திடம் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, 75ஆவது சுதந்திர கொண்டாட்டத்துடன் இணைந்து இந்த பஸ்களை வழங்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்தியாவின் 500 பேருந்துகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 165 பேருந்துகளை அந்நாட்டு அரசு வழங்கியுள்ளது. இந்தத் திட்டம் வரும் மார்ச்சுக்கு முன்னர் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ)

# இரட்டை குடியுரிமை எம். பிகளின் தகவலை வெளியிட காலக்கெடு!

## பவ்ரல் அமைப்பு விடுத்தது

கொழும்பு, பெப். 06

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இரட்டை குடியுரிமை உடையவர்கள் தொடர்பான தகவல்களை வெளியிடும் நிலைப்பாட்டை இரண்டு வாரங்களுக்குள் அறிவிக்க வேண்டும் என்று தகவல் அறியும் ஆணைக்குழு குடிவரவு - குடியகல்வு திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி உள்ளது.

இதன் பிரகாரம் கிடைக்கும் பதிலுக்கு அமைய நீதிமன்ற உதவியை நாடுவோம் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

இரட்டை பிரஜா உரிமை உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பாக தகவல் அறியும் ஆணைக்குழுவுக்கு பவ்ரல் அமைப்பால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மேன்முறையீடு தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இரட்டை பிரஜா உரிமை உள்ள உரிப்பினர்கள் தொடர்பாக குடிவரவு - குடியகல்வு திணைக்களம் அதுதொடர்பாக வழங்குமாக இருந்தால் அது தொடர்பில் நீதிமன்றத்தின் உதவியை நாடுவோம். இதுதொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக தகவல் அறியும் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்திருந்த மேன்முறையீடு கடந்த வாரம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டிருந்தது.

இரட்டை பிரஜா உரிமை உள்ளவர்கள் தொடர்பான தகவல்களை வழங்குவது சம்பந்தமாக தங்களின் நிலைப்பாட்டை இரண்டு வாரங்களுக்குள் அறிவிக்க வேண்டும் என ஆணைக்குழுவினால் குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதன் பிரகாரம் குறித்த அதிகாரிகளால் வழங்கப்படும் பதிலுக்கு அமைய அடுத்தகட்ட நடவடிக்கை எடுப்போம். அத்துடன், இரட்டை பிரஜா உரிமை உள்ளவர்கள் நாட்டில் இருப்பது தொடர்பில் எந்த பிரச்னையும் இல்லை. ஆனால், அவர்கள் நாட்டில் தீர்மானம் எடுக்கும் இடங்களில் பதவி வகிப்பது பொருத்தமில்லை.

அது எமது நாட்டின் இறையாண்மைக்கு பாதிப்பாகவும் அமையும். குறிப்பாக நாட்டில் சட்டம் இயற்றும் பாராளுமன்றத்தில் இவர்கள் இருந்த, சட்ட மூலம் அனுமதிக்கப்படும்போது, அவர்கள் நாட்டுக்கு பூரண நம்பிக்கையும் செயல்படுமா என்ற சந்தேகம் எழுகிறது - என்றார். (ஐ)

# தலதா மாளிகை தாக்குதலையும் முன்னரே தடுக்க தவறியிருந்தனர்

## தியவதன நிலமே குற்றச்சாட்டு

கண்டி, பெப். 06

**ஈஸ்டர் தாக்குதலை போன்றே அன்று தமிழீழ விடுதலைப் புலிகளால் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்ட தலதா மாளிகைமீதான தாக்குதலையும் அரசாங்கம் தடுக்கத் தவறியது என்று முன்னாள் தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரத்ன குற்றம் சாட்டியுள்ளார்.**

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு சாடினார்.

அதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை முன்னரே வெளியிட்டும் உளவுத்துறையினர் அதனை தடுக்க தவறியமை போன்றே, 1998 ஜனவரி 25 ஆம் திகதி தலதா மாளிகைமீதான தாக்குதலை, உளவுத்துறையினர் முன்கூட்டியே தெரிவித்திருந்த போதிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இது தொடர்பாக அரசாங்கத்துக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்திய போதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இறுதியாக மல்வத்து அஸ்கிரிய பீடாதிபதிகளுடன் கலந்துரையாடி புனித தந்தத்தை வேறொரு பாதுகாப்பான இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. புனித தந்தத்தை வேறு ஒரிடத்தில் பாதுகாப்பாக வைத்திருந்தது தனக்கும் தன் சார்ந்தவர்களுக்கு மாத்திரமே தெரியும் என்றும் அதனை ஊடகங்களுக்கு வெளிப்படுத்துவது இதுவே முதல் முறை என்றும் முன்னாள் தியவதன நிலமே தெரிவித்துள்ளார்.

நிரஞ்சன் விஜயரத்ன வெளிப்படுத்திய தகவல்கள் தொடர்பில் அப்போது மத்திய மாகாணத்துக்கு அச்சமயம், பொறுப்பாக இருந்த அரச புலனாய்வுத்துறையின் பிரதிப் பணிப்பாளரிடம் வினவிய போது, புலனாய்வுத்துறையினர் தாக்குதல் தொடர்பான தகவல்களை முன்கூட்டியே வெளியிட்டதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன என்றார்.

கண்டியில் சுதந்திர தின நிகழ்வை நடத்த அரசாங்கம் தீர்மானித்த நிலையில், கண்டியில் பயங்கரவாதச் செயல்கள் இடம்பெறலாம் என தகவல் கிடைத்ததையடுத்து, அதற்காக சிறப்பு ஊடுருவல் வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

மேலும்,ஹந்தானையில் பொருத்தப்பட்டுள்ள தகவல் கருவிகள் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் செய்திகளை கண்காணித்து வந்ததாகவும், கண்டி பகுதிக்குள் வெடிகுண்டு பொருத்தப்பட்ட பாரவூர்தி நுழைந்தது தொடர்பில் அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்தானந்த டி சில்வாவுக்கு எழுத்து மூலம் அறிவித்தேன்.

மத்திய மாகாணத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் மூத்த காவல்துறை அத்தியட்சகர் ஆகியோருக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதுடன், உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரும் வாய்மொழியாக அறிவித்துள்ளார்.

குண்டு வெடிப்புக்கு ஒரு வாரம் முன்னதாகவே மாகாண புலனாய்வுத்துறையினர் இந்த அறிவிப்பை வெளியிட்டனர். ஆனால், இது தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசு செயற்படுத்தவில்லை என்பது 25 ஆம் திகதி தலதா மாளிகை மீது நடத்தப்பட்ட வெடிகுண்டு தாக்குதலில் அது உறுதி செய்யப்பட்டது.

பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு, படையினரின் நடவடிக்கை இன்மை குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு, மூன்று பேர் கொண்ட ஆணைக் குழுவும் நியமிக்கப்பட்டது. ஆனால் அந்தக் குழுவின் அறிக்கை இதுவரை வெளிவரவில்லை என்றும் அவர் கூறினார். (ஐ-சி)

# போதை பாவனையை தடுக்க முனைந்தவருக்கு கத்திக்குத்து

மட்டக்களப்பு, பெப். 06

போதைவஸ்து பாவனையில் ஈடுபடும் நபருக்கும், அதனை தடுக்க முயற்சி செய்த நபருக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடு கைகலப்பில் முடிந்ததில் மூவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் வாழைச்சேனையில் இடம்பெற்றுள்ளது. இது குறித்து தெரியவருவதாவது,

போதைப்பொருள் பாவனையாளர் நபர் ஒருவரின் தலைப் பகுதியில் கத்தியால் குத்தியுள்ளார். இதில், தாக்கப்பட்ட நபரின் தாயாரும் உறவினரான பத்து வயது சிறுவனும் காயமடைந்தனர்.

காயமடைந்த தாயும் மகனும் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதுடன், காயமடைந்த சிறுவன் வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மகனை தேடி வந்தவர்கள் தாயை கொன்று தப்பினர்!

கொழும்பு, பெப். 06

மகனை தேடி காரில் வந்த மூவர் அவர் இல்லாத நிலையில் அவரின் தாயை கடத்திச் சென்று கொன்றுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி - எம்பிலிபிட்டி பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த பெண்ணின் மகன் எம்பிலிப்பிட்டி பிரதேசத்தில் ஹோட்டல் ஒன்றில் பணிபுரிந்து வந்துள்ளார். அந்த சமயத்தில் ஹோட்டல் உரிமையாளரின் மனைவிக்கும் அவருக்கும் இடையே நெருக்கம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து இருவரும் தலைமறைவாகினர்.

இந்நிலையில் ஹோட்டலின் உரிமையாளரும், மேலும் இருவரும் காரில் வந்து மகனை தேடியுள்ளனர். எனினும், மகன் அங்கே இல்லாததால் அவரின் தாயாரை காரில் கடத்திச் சென்றுள்ளனர்.

கடத்தியவர்களை அவரை கொன்று எம்பிலிப்பிட்டி ஆயுர்வேதத மருத்துவமனையில் சடலத்தை வீசிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை எம்பிலிப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# நாகவிகாரையில் இரத்ததான முகாம்!



யாழ்ப்பாணம், பெப். 06

போயா தினமான நேற்று யாழ்ப்பாணம் ஆரியகுளம் நாக விகாரையில் பொலிஸாரால் இரத்த தானம் செய்யப்பட்டது.

ஆரியகுளம் நாக விகாரையின் விகாரதிபதி சிறீ விமல தேரரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்த வங்கியில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு இந்த இரத்த தான முகாம் நடைபெற்றது.

இதில், யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலர் பங்கேற்று குருதிக் கொடை அளித்தனர். இந்த நிகழ்வில், வடக்கு மாகாண மூத்த பிரதி பொலிஸ் மாஅதிபர் யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ஐ -3)

# 3 கஜமுத்துகளை விற்க முயன்றவர் கைது

கல்முனை, பெப். 06

கஜமுத்துக்களை இரகசியமாக விற்பனை செய்ய முயன்ற இளைஞனை திருக்கோவில் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை - கல்முனை புறநகர் பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் வெள்ளிக்கிழமை இரவு சந்தேகத்திற்கிடமாக ஒருவர் நடமாடுகிறார் என்று இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றை அடுத்து திருக்கோவில் விசேட அதிரடிப்படையினர் குறித்த இளைஞனை கைது செய்தனர்.

இதன்போது கைதான சந்தேக நபர் வசம் இருந்து சுமார் 4 யானை தந்தத்துக்குள் இருக்கின்ற கஜமுத்துக்கள் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டன.

திருகோணமலை கந்தளாயை சேர்ந்த 29 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஈஸ்டர் தாக்குதல் சந்தேகநபர் மாரடைப்பால் சிறையில் மரணம்!

கொழும்பு, பெப். 06

கொழும்பில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த காத்தான்குடியை சேர்ந்த வை.பி. அப்துல் ரஊப் (வயது 52) நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனையில் உயிரிழந்தார்.

இவர், 2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய சந்தேக நபராக 2019 மே 5ஆம் திகதி கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார் என்று தெரியவருகிறது

இவர் இருதய நோயினால் பாதிக்கப்பட்டு இருந்தார் என்றும் இரு முறை சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார் எனவும் கூறப்படுகின்றது. (ஐ)

# புதுக்குடியிருப்புக்கு கசிப்பை கடத்திய இருவர் கைதாகினர்!

கிளிநொச்சி, பெப். 06

தருமபுரத்தில் இருந்து புதுக்குடியிருப்பு பகுதிக்கு பொலித்தீன் பையில் பொதி செய்து 80 போத்தல் கசிப்பை கொண்டு சென்ற இருவரை தருமபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஏ -35 வீதியின் நெத்திலியாறு பகுதியில் நேற்று அதிகாலை வீதி சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரே இவர்களை கைது செய்தனர்.

கைதான இருவரும் புதுக்குடியிருப்புக்கு கசிப்பை பொலித்தீன் பையில் பொதி செய்யப்பட்டு மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்று கொண்டிருந்தனர். கைப்பற்றப்பட்ட கசிப்பு சுமார் 80 போத்தல்கள் அளவு கொண்டது என்று பொலிஸார் தெரிவித்த னர்.

கைதானவர்களை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)




# 75 பயனாளிகளுக்கு காணி மீளளிப்பு பத்திரம்!

முல்லைத்தீவு, பெப். 06

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 75 பயனாளிகளுக்கு காணி மீள் அளிப்பு பத்திரங்கள் வழங்கப் பட்டுள்ளன.

நாட்டின் 75 ஆவது சுதந்திர தின நிகழ்வை கொண்டாடும் முகமாக முல்லைத்தீவு புதுக் குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 75 குடும்பங்களுக்கு காணி மீள் அளிப்பு பத்திரங்கள் வழங்கப் பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத் தில் சனிக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க. விமலநாதன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

அத்துடன், அரச அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். (ஐ)

# 13ஐ நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு இந்தியா பாராட்டு!

கொழும்பு, பெப். 06

**அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளமை, இன நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு இந்தியா பாராட்டு தெரிவித்துள்ளது என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித் துள்ளது.**

நாட்டின் 75ஆவது சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொள்வ தற்காக இலங்கை வந்த இந்திய வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் வி. முரளிதரன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஜனாதிபதி அலு வலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடினார். இதன் போதே அவர் இவ்வாறு பாராட்டுக்களை தெரிவித்தார் என்று கூறப்பட்டது. (ஐ)



## போராட்டக்காரர் மீது தாக்குதல்; மனித உரிமைகள் குழு விசாரணை

கொழும்பு, பெப். 06

மருதானையில் அமைதி யான முறையில் ஆர்ப்பாட்டங் களில் ஈடுபட்டவர்கள்மீது மேற்கொள்ளப்பட்ட கண்ணீர் புகை குண்டு தாக்குதல், நீர்த் தாரை பிரயோகம் குறித்து விசேட விசாரணைகளை இலங் கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆரம்பித்துள் ளது.

முதல்கட்ட விசாரணையில் ஆணைக்குழுவை சேர்ந்தவர் கள் சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு நேற்று முன்தினம் நேரில் சென்று ஆராய்ந்த னர்.

இவர்கள் முதல்கட்ட அறிக் கையை இன்று திங்கட்கிழமை சமர்ப்பிக்கவுள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

# போதை விருந்தில் பங்கேற்ற 10 பெண்களுட்பட 41 பேர் கைது!

கொழும்பு, பெப். 06

முகப்புத்தக நண்பர்கள் மூலம் ஏற்பாடு செய்யப்பட் டிருந்த களியாட்ட நிகழ்வொன் றின் சுற்றிவளைப்பில் 31 ஆண்களும், 10 பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பாணந்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருள் பாவ னையுடன் களியாட்ட நிகழ்வு நடைபெறுவதாக பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவ லின் அடிப்படையில் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரி விக்கப்பட்டது.

கஞ்சா வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 8 ஆண் களும் 2 பெண்களும் கைது செய்யப்பட்டனர். இதே சம யம், தன்னை பாலியல் வன் கொடுமை செய்ய முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் மேலும் இரு ஆண்கள் கைது செய்யப் பட்டனர். தவிர, போதை விருந் தில் பங்கேற்ற 21 ஆண்களும், 8 பெண்களும் கைது செய்யப் பட்டனர். கைதுசெய்யப் பட்டவர்கள் கொழும்பு 15, தெகிவளை, கல்கிசை, காலி, கலகெடி ஹென, பலாங்கொடை, இரத்தினபுரி, ஹெட்டிமுல்லை, மற்றும் களனி ஆகிய பிரதேசங் களை சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் அனைவரும் 20 முதல் 40 வயதுக்கு இடைப்பட்ட வர்கள் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் அனை வரும் பாணந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள் ளனர். (ஐ)

*மாற்றாந்தாய் துன்புறுத்தல்*

# 4 கி. மீற்றர் நடந்து சென்று முறைப்பாடு செய்த சிறுமி!

அநுராதபுரம், பெப். 06

மாற்றாந்தாயின் தொல்லை தாங்க முடியாமல் 11 வயது சிறுமி ஒருவர் தனியாக பொலிஸ் நிலையத்துக்கு நடந்து வந்த தாக ஹொரவப்பொத்தானை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சிறுமியின் தாய் சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்து விட்டார். பின்னர் சிறுமியின் தந்தை ஒரு மகளின் தாயான விதவை பெண் ஒருவரை மறு திருமணம் செய்துள்ளார்.

இந்நிலையில், பொலிஸ் நிலையத்துக்கு சென்ற சிறுமி, தனது சித்தி தனது மகளிடம் மிகவும் அன்பாக நடந்து கொள்கிறார் என்றும் தன்னை நிராகரிப்பதுடன் துன்புறுத்து கிறார் எனவும் முறையிட்டுள் ளார்.

சித்தியின் துன்புறுத்தல் தாங்க முடியாமல் சிறுமி கதறி அழுதவாறு பொலிஸாரிடம் சென்று தனது முறைப்பாட்டை கூறியுள்ளார். இதற்காக அந்த சிறுமி வீட்டிலிருந்து 4 கி. மீற் றர் தூரம் நடந்து சென்றுள் ளார் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

# தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைக்காக ரூ. 280 கோடியை கேட்கிறது பொலிஸ்!

## திறைசேரியிடம் முறையிட தேர்தல் குழு முடிவு

கொழும்பு, பெப். 06

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர் தல் பணிகளில் ஈடுபடுவதற்காக பொலிஸ் திணைக்களத்தினால் சமர்ப் பிக்கப்பட்ட மதிப்பீடுகள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு திறைசேரியிடம் ஆட்சேபனைகளை முன்வைக்கவுள்ளது.

2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொலிஸ் திணைக் களத்துக்கு வழங்கப்பட்ட நிதியை விட மூன்று மடங்கு அதிக செலவு மதிப் பீட்டை பொலிஸ் திணைக்களம் சமர்ப் பித்துள்ளது.

மார்ச் 9ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு சேவைகளை வழங்குவதற்கு தேவையான தொகையாக 280 கோடி ரூபாய் மதிப்பீட்டை பொலிஸ் திணைக்களம் அனுப்பி வைத்துள்ளது என்று கூறப்படுகின்றது.

கொடுப்பனவுகள், எரிபொருள் செலவுகள், வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல், தொலைபேசி மற்றும் தகவல் தொடர்பு, எழுதுபொருட்கள் மற்றும் தற்செயலான செலவுகள் ஆகிய வற்றை உள்ளடக்கிய மதிப்பிடப்பட்ட செலவுகள், கடந்த தேர்தல் செலவை விட ஆறு மடங்கு வரை பெரிய அதி கரிப்பைக் காட்டியுள்ளன என்று மூத்த தேர்தல் ஆணைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த அதிகரிப்புகளில் வாகன வாடகை செலவு ரூ.13. 8 கோடியிலி ருந்து ரூ.74. 5 கோடியாக அதிகரித்துள் ளது. எரிபொருள் கட்டண மதிப்பீடுகள் 10. 8 கோடி ரூபாயிலிருந்து இருந்து 67. 5 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

ஆணைக்குழு தனது சொந்த மதிப் பீடுகளைச் செய்துள்ளதாகவும், பொலிஸ் திணைக்களம் அனுப்பிய புள்ளிவிவரங்கள் மிகவும் அதிகமாக மதிப்பிடப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

பொலிஸ் திணைக்களம் பற்றுச் சீட்டுக்களை சமர்ப்பித்த பின்னரே பணம் செலுத்தவும் தேர்தல் ஆணைக் குழு முடிவு செய்துள்ளது.

இதேசமயம், தமது மதிப்பீடுகள் தற்போதைய விலையை அடிப்படை யாகக் கொண்டவை என்று மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

தேர்தல் தொடர்பான மூன்று மனுக்கள் நிலுவையில் உள்ள நிலையில், உயர் நீதிமன்றத்தில் தேர்தல் ஆணைக் குழு இந்த விசயத்தை எடுத்துக் கொள் ளும்.

தேர்தலுக்கான திறைசேரி நிதியை விடுவிப்பதில் ஏற்பட்ட தாமதம் குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரவும் தேர் தல் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

தேர்தலுக்குத் தயாராவதற்குத் தேவை யான ரூ. ஒரு கோடியில் இருந்து ரூ. 3. 5 கோடி ரூபாய் மட்டுமே தேர்தல் ஆணைக்குழு பெற்றுள்ளது.

தேர்தலுக்குத் தேவையான தொகையை தாங்கள் மதிப்பிட்டுள்ளதா கவும், ஆனால் உரிய நேரத்தில் நிதி கிடைக்காததால் கவலைப்படுவதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

மதிப்பீடுகளின்படி பெப்ரவரி மாத இறுதிக்குள் ரூ. 80 கோடி தேவைப்படும் மார்ச் இறுதிக்குள் ரூ.160 கோடி, ஏப்ரல் இறுதிக்குள் ரூ.140 கோடி, மே இறுதிக் குள் ரூ.60 கோடி ஜூன் இறுதிக்குள் ரூ.12 கோடி மற்றும் ஜூலை இறுதிக்குள் ரூ. 8 கோடி தேவைப்படும்.

நிதிச் சிக்கலைத் தவிர, ஆணைக்குழு மற்றும் வேட்பாளர்களுக்கான எரி பொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்க மின்ச ாரம் மற்றும் எரிசக்தி அமைச்சிடமிருந்து தேர்தல் ஆணைக்குழு திருப்திகரமான பதிலைப் பெறவில்லை என்பதும் குறிப் பிடத்தக்கது.

# இந்தியாவுடன் இணைய 'பால்டிஸ்தான்' மக்கள் போராட்டம்!

## நில ஆக்கிரமிப்பை தொடரும் பாகிஸ்தான் இராணுவம்!!

ஐங்கரன் விக்கினேஸ்வரா




இன - மத முரண்பாடுகள் தற்போது பாகிஸ்தானிலும் தீவிரமாக வலுத்து வருகிறது. நீண்ட காலமாக தனிநாட்டுக்காக போராடும் பலுச்சிஸ்தான் மக்களைப் போலவே, ஆக்கிரமிக்கப்பட்ட ஜம்மு காஷ்மீரில் வாழும்' பால்டிஸ்தான்'

(Baltistan) இன மக்கள் தற்போது இந்தியாவுடன் இணைய மாபெரும் மக்கள் போராட்டங்களை நடாத்தி வருகின்றனர்.

**இந்தியாவுடன் இணைய போராட்டம்**

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீரில் உள்ள பால்டிஸ்தான் (Baltistan) மக்கள், தாங்கள் இந்தியாவுடன் இணைய விரும்புவதாகக் கூறி இவ் வருடம் ஜனவரி 12ம் திகதியில் நடத்திய போராட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

ஜம்மு காஷ்மீரின் அங்கமாக இருந்த கில்ஜித் பால்டிஸ்தானை பாகிஸ்தான் ஆக்கிரமித்துக் கொண்டு, அதனை தங்கள் நாட்டின் ஒரு பகுதி என கூறி வருகிறது. எனினும், அதனை இந்தியா ஏற்கவில்லை. ஆக்கிரமிப்பு ஜம்மு காஷ்மீர் பகுதிகளும் இணைந்திருப் பதான வரைபடமே இந்தியாவின் அதிகாரபூர்வ வரைபடமாக இந்திய மத்திய அரசு அறிவித்து வருகிறது.

ஆக்கிரமிப்பு ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த கில்ஜித் பால்டிஸ்தானில் உள்ள ஸ்கார்டு என்ற நகரத்தில் இவ்வருட ஜனவரி 12ம் திகதி வியாழக்கிழமை, நடைபெற்ற மாபெரும் போராட் டத்தில், தாங்கள் இந்தியாவுடன் இணைய விரும்புவதாகவும், அதற்கேற்ப கார்கில் சாலையில் உள்ள எல்லை தடுப்பை பாகிஸ்தான் அகற்ற வேண்டும் என்றும் கோரி முழக்கங்கள் எழுப்பப் பட்டன. இந்தப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

**இமயமலையில் இன்னோர் 'குட்டி திபெத்'**

இமயமலைத் தொடரில் உள்ள கார கோரம் மலையின், கே-2 கொடுமுடியின் தெற்கில், 3,350 மீட்டர் உயரத்தில் உள்ள பால்டிஸ்தானை "குட்டி திபெத்" என்றும் அழைப்பர். இங்கே திபெத்திய பல்தி மொழி, உருது, காசுமீர வட்டார மொழிகள் பேசப்படுகின்றன.

உயரமான மலைகளூடாக பல தோரா பனிபடர்ந்த கொடுமுடிகள் கொண்ட இம்மண்ணில்,சிந்து ஆறு இவ் வழியாகத் தான் பாய்கிறது. இப்பகுதி களில் இஸ்லாம் மதம் அறிமுகம் ஆவதற்கு முன்னர், போன் பௌத்தம் மற்றும் திபெத்திய பௌத்தம் முக்கிய சமயமாக விளங்கியது. அக்காலத்தில் திபெத்திய பல்தி மக்கள் பெரும்பான் மையாக வாழ்ந்தனர்.

இப்பகுதியில் தற்போது இஸ்லாம் பெரும்பான்மை சமயமாக இருப்பினும், துவக்க காலத்தில் இப் பகுதிகளில் பௌத்த சமயத்தைப் பின்பற்றும் திபெத் திய பல்தி மக்கள் வாழ்ந்தனர்.

கிபி ஏழாம் நூற்றாண்டுகளில் திபெத் திய பேரரசின் ஒரு பகுதியாக பால்டிஸ் தான் விளங்கியது. அத்துடன் பால்டிஸ்த ான் பகுதிகளில் பண்டைய பௌத்த தொல்லியல் களங்கள் அதிகமாக காணப்பட்டன.

கிபி 16 - 17ம் நூற்றாண்டுகளில் அரே பிய ஆதிக்கங்களால் சூபியிசம் பரவிய தால், பால்டிஸ்தான் பகுதிகளில் பெரும்பான்மையான மக்கள் நூர்பக் சியா இஸ்லாம் பிரிவைத் தழுவினர்.

**பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் காஷ்மீர்**

நாடு சுதந்திரம் அடைவதற்கு முன், ஜம்மு காஷ்மீர் சமஸ்தானத்தின் ஒரு பகுதியாகவும், டோக்ரா மன்னரின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாகவும் தங்கள் பகுதி இருந்ததையும் பால்டிஸ் தான் மக்கள் தெரிவித்துள்ள னர்.

பால்டிஸ்தான் அல்லது மத்திய நிர்வாகத்தில் வடக்கு நிலங்கள்(Federally Administered Northern Areas) இந்தியா வடக்கில் அமைந்த ஓர் அரசியல் பிரிவு ஆகும்.

இப்பகுதியின் தலைநகரம் கில்ஜித். மொத்தத்தில் 1.5 மில்லியன் மக்கள் இப்பகுதியில் வசிக்கின்றனர். 1970இல் இந்த அரசியல் பிரிவு உருவாக்கப்பட் டது. இது கில்ஜித் மற்றும் பால்டிஸ் தான் என இரண்டாக பிரிக்கப்பட்டுள் ளது. வடக்கில் ஆப்கானிஸ்தான், வடகிழக்கில் சீன மக்கள் குடியரசு, தென் கிழக்கில் இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலம் அமைந்தன. 2009ஆம் ஆண்டு டன் இப்பகுதியை வடக்கு நிலங்கள் என்று குறிப்பிடுவதை விட்டு கில்ஜித் - 'பால்டிஸ்தான்' என்றே இந்திய அரசால் அழைக்கப்படுகிறது.

2017 பாகிஸ்தான் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 72,496 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட கில்ஜித் - பால்டிஸ்தான் பகுதியின் மக்கள் தொகை 1,492,924 ஆகும்.

**இந்திய - பாகிஸ்தான் எல்லை போர்**

26 அக்டோபர் 1947 அன்று ஜம்மு காசுமீரின் மன்னர் அரி சிங்கு, இந்தியாவு டன் செய்து கொண்ட உடன்படிக் கையை எதிர்த்து, பாகிஸ்தான் இராணு வம் மற்றும் பஷ்தூன் பழங்குடிகள் மேற்கு காசுமீர் பகுதிகளையும், கில்ஜித் - பால்டிஸ்தான்

வடக்கு நிலப்பகுதிகளை ஆக்கிர மித்து 'ஆசாத் காஷ்மீர்' எனப்பெயரிட் டனர். ஆயினும் காசுமீர் சமவெளி, ஜம்மு பகுதி, லே மாவட்டம் மற்றும் கார்கில் மாவட்டங்கள் இந்தியாவுடன் இணைக்கப்பட்டன.

1947 - 1948 இந்திய - பாகிஸ்தான் போருக்குப் முன்னர் பாகிஸ்தானின் பஷ் தூன் மக்கள் காஷ்மீரின் வடக்கு நிலங் களைக் கைப்பற்றி பாகிஸ்தானுடன் இணைத்த பின் தற்போது இது பாகிஸ் தான் அரசுக்குக் கட்டுப்பட்ட மாநில மாக உள்ளது. வடக்கு நிலங்கள் காஷ் மீரின் பகுதி என்றாலும் இதற்கு, மேற்குப் பகுதியான ஆசாத் காஷ்மீருக்கு உள்ள அதிகாரங்களை பாகிஸ்தான் அரசு அளிக்கவில்லை. ஐக்கிய நாடுகள் அவையே காஷ்மீரின் வடக்கு பகுதியை குறிக்க வடக்கு நிலங்கள் என்ற சொல்லை முதலில் பயன்படுத்தியது.

1963 இல் பாகிஸ்தான் வடக்கு நிலங்கள் பகுதியிலிருந்து காரகோரம் பகுதியை சார்ந்த ஒரு பகுதியை சீன அரசிற்கு அளித்தது. உலகின் 2வது உயரமான கொடுமுடியான கே-2 மற்றொரு உயரமான கொடுமுடியான நங்க பர்வதம் இங்கு உள்ளன.

பின்னர் 1971 இந்திய - பாகிஸ்த்தான் போருக்குப் பின், துர்துக், நூப்ரா பள்ளத் தாக்கும் இந்தியாவுடன் இணைக்கப் பட்டது.

**இரண்டாம் தர மக்களாக**

தற்போது லடாக்கில் பால்டிஸ்தான் இன மக்களில் ஒரு பகுதியினர் இருப்பதையும் சுட்டிக்காட்டும் அவர் கள், தாங்கள் மீண்டும் இந்தியாவுடன் இணைய விரும்புவதாகத் தெரிவித்துள் ளனர். மேலும், பால்டிஸ்தான் இன மக்களை பாகிஸ்தான் இரண்டாம் தர மக்களாக நடத்துவதாகவும், தங்கள் நிலங்களை பாகிஸ்தான் ராணுவம் அபகரித்து வருவதாகவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

பால்டிஸ்தான் பகுதியில் உள்ள நிலங்களை ராணுவம் கையகப்படுத்து வதற்கு எதிர்ப்பு தெரிவித்து முன்பு முசாபராபாத் நகரில் போராட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசிய பால்டிஸ்தான்

முன்னாள் பிரதமர் ராஜா ஃபரூக் ஹைதர், பாதுகாப்புப் படையினர் நிலங்களை கையகப்படுத்துவதற்கு பாகிஸ்தான் அரசு தடை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

**நில ஆக்கிரமிப்பில் பாகிஸ்தான் ராணுவம்**

பால்டிஸ்தான் இன பொதுமக்களின் நிலங்களை ராணுவம் தொடர்ந்து கைப்பற்றி வருவதற்கு எதிர்ப்பு தெரி வித்து போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எவ்வித இழப் பீடும் தராமல் நிலங்களை ஆக்கிர மிப்பதை பாகிஸ்தான் ராணுவம் பல ஆண்டுகளாக வழக்கமாகக் கொண்டி ருப்பதாகக் குற்றம்சாட்டும் பால்டிஸ் தான் மக்கள், இதுவரை 60 லட்சம் சதுர மீட்டர் பரப்பளவு நிலங்களை பாகிஸ் தான் ஆக்கிரமித்திருப்பதாகக் கூறுகின்ற னர்.

கில்ஜித்தில் உள்ள மினவார் என்ற கிராமத்தில் நிலங்களை ஆக்கிரமிக்க பாகிஸ்தான் ராணுவம் முயன்றதை அடுத்து, அந்தக் கிராம மக்கள் தெருவில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாகிஸ்தான் ராணுவத்திடம் ஏராள மான நிலங்களை தாங்கள் இழந்து விட்டதாகவும், இனியும் ஒரு அடி நிலத் தையும் இழக்க மாட்டோம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். தங்களின் போராட்டத்திற்கு எதிராக ராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தினாலும், குண்டு களை ஏற்போமே தவிர நிலங்களை விட்டுக்கொடுக்க மாட்டோம் என அவர்கள் தெரிவித்துள்ளனர். மினவார் மக்களின் இந்தப் போராட்டத்திற்கு கில்ஜித் முழுவதும் ஆதரவு பெருகி யுள்ளது. மேலும், பல இடங்களில் பாகிஸ்தான் ராணுவத்துக்கு எதிராக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

நில அபகரிப்பு குறித்து கருத்து தெரிவித்துள்ள ஐக்கிய காஷ்மீர் மக்கள் தேசிய கட்சியின் தலைவர் சவுகத் அலி காஷ்மீரி, நாடு சுதந்திரம் அடைவதற்கு முன் பால்டிஸ்தான், ஜம்மு காஷ்மீர் சமஸ்தானத்தின் கீழ் இருந்ததாகவும், தற்போது பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீர் தொடர் புறக்கணிப்புக்கு உள்ளாகி இருப்பதாகவும் குற்றம்சாட்டி யுள்ளார்.

கில்ஜித்தில் வாழும் பால்டிஸ்தான் மக்களின் அடிப்படை உரிமைகளை பாகிஸ்தான் அரசு மறுத்து வருவதாகத் தெரிவித்துள்ள சவுகத் அலி, காஷ்மீர் மக்களின் மத உணர்வுகளைத் தூ ண்டுவதை ஒரு கொள்கையாக பாகிஸ் தான் பின்பற்றி வருவதாக குற்றஞ்சாட்டி விமர்சித்தார். •



ஈழநாடு



# இலங்கை கடன் மறுசீரமைப்பு: இந்தியா ஆர்வம் காட்டும்போது சீனா பின்தங்க காரணம் என்ன?



பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் 2.9 பில்லியன் அமெரிக்க டாலரை வழங்க தயாராகவுள்ள பின்னணியில், அதற்கு ஆதரவு வழங்க சீனா முன்வந்துள்ள போதிலும், சீனாவின் ஆதரவு போதுமானதாக இல்லை என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு அதிகாரபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்த அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் விக்டோரியா நூலண்ட் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

தனது விஜயத்தின்போது கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றால், சர்வதேச நாணய நிதியத்தின் நம்பிக்கையை பெற்றுக்கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிடுகிறார்.



இந்த நிலையில், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனை பெற்றுக்கொள்வதற்கான அனைத்து வித உதவிகளையும் அமெரிக்கா செய்யும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்க்கும் நம்பகரமான உத்தரவாதத்தை இந்தியா வழங்கியுள்ளதாக அவர் கூறுகின்றார்.

எனினும், சீனா இதுவரை வழங்கிய உத்தரவாதம் போதுமானதாக இல்லை எனவும், சீனாவிடமிருந்து நம்பகமான உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நம்பிக்கையை வென்றெடுக்கும் வகையிலான சான்றிதழை, சீனா வழங்கும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் விக்டோரியா நூலண்ட் குறிப்பிட்டுள்ளார்.

### சீனா வழங்கிய உத்தரவாத சான்றிதழ்

சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கியினால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள கடனை மீள செலுத்துவதற்கு இரண்டு ஆண்டு அவகாசம் வழங்கப்பட்டது.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்க வேண்டிய 2.9 பில்லியன் அமெரிக்க டாலரை பெற்றுக்கொள்வதற்கு, தாம் இலங்கைக்கு ஆதரவு வழங்குவதாகவும் சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கி கடிதமொன்றின் ஊடாக கடந்த மாத இறுதியில் அறிவித்திருந்தது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கைக்கு கடன் வழங்கப்பட வேண்டுமாயின், கடன் வழங்கிய நாடுகளின் இணக்கம் அவசியமானதாக காணப்படுகின்றது.

இந்த நிலையில், இலங்கைக்கு பாரியளவில் கடன் வழங்கிய நாடுகள் மத்தியில், இந்தியா மற்றும் சீனா முன்னணி வகிக்கின்றன.

கடன் மறுசீரமைப்பிற்காக இந்த இரு நாடுகளின் இணக்கத்தை பெற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கம் கடந்த காலங்களில் பாரிய முயற்சிகளை முன்னெடுத்திருந்தது.

இதன் பிரதிபலனாக கடன் மறுசீரமைப்பிற்கு இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், கடந்த 19ம் தேதி இலங்கைக்கு அதிகாரபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, வெளிவிவகார அமைச்சர் அல் சப்ரி உள்ளிட்ட பல்வேறு தரப்பினரை சந்தித்து, அவர் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார்.

இதையடுத்து, கொழும்பில் கடந்த 20ம் தேதி இந்திய வெளிவிவகார அமைச்சர் மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர ஆகியோர் இணைந்து கூட்டு ஊடக சந்திப்பொன்றை நடத்தியிருந்தனர்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கான இணக்க சான்றிதழை தாம் சர்வதேச நாணய நிதியத்திடம் கையளித்ததாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இதன்போது தெரிவித்திருந்தார்.

“ஏனையோர் செய்வார்கள் எனக் காத்திருப்பதைத் தவிர்த்து, நாங்கள் சரியானது என நம்புவதை செய்தோம்,” என எஸ்.ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான சான்றிதழை, இந்தியா சர்வதேச நாணய நிதியத்திற்குக் காலதாமதமின்றி அனுப்பியுள்ளதாகவும் ஏனைய கடனாளிகளும் அவ்வாறே செய்வார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் இணக்கப்பாடு கிடைக்கப் பெற்றதை அடுத்து, சீனாவின் இணக்கப்பாட்டிற்காக இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்திருந்தது.

இந்த நிலையில், சீனாவும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பிற்கு தற்போது இணக்கம் தெரிவித்துள் ளது.

எனினும், சீனாவினால் வழங்கப்பட்ட இந்த இணக்க மானது, சர்வதேச நாணய நிதியத்திற்கு போதுமானது அல்லவென அறிவிக்கப்பட்டுள்ளது.

### கடன் மறுசீரமைப்பிற்கு சீனா பின்வாங்க காரணம் என்ன?

சீனா இலங்கையின் கடன் மறுசீரமைப்பு விவகாரத் தில் பின்வாங்கியதற்கான காரணம் என்ன என்பது தொடர்பில் ஊடகவியலாளர் யசிஹறன், தெளிவூட்டி னார்.

“கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் சீனா பின்வாங்கியதற்கு இரண்டு, மூன்று காரணங்கள் இருக்கின்றன. சீனாவின் கடன் வழங்கும் கொள்கையில், கடன் மறுசீரமைப்பு என்ற திட்டம் கிடையாது. சீனா எந்தவொரு நாட்டிற்கும் அப்படி செய்ய மாட்டார்கள். அது தான் முதல் காரணம்.

அவர்களின் கடன் திட்டமானது, நீண்டகால இலக்குகளை கொண்ட கடனாகவே இருக்குமே தவிர, கடன் மறுசீரமைப்புக்கு அவர்கள் செல்லமாட்டார்கள். இதுவரை காலம் ஒரேயொரு நாட்டிற்கு மாத்திரம் கடன் மறுசீரமைப்புக்கு அவர்கள் இணங்கியிருந்தார்கள். ஆபிரிக்காவிலுள்ள ஒரு தீவு நாட்டிற்கு மாத்திரம் அவர்கள் கடன் மறுசீரமைப்பிற்கு சென்றுள்ளார்கள்.



அதனால், இலங்கை அதனை காரணம் காட்டி, தங்களையும் கடன் மறுசீரமைப்புக்குள் உள்வாங்குமாறு கோரி வருகிறது. இலங்கை சர்வசேத்திடமிருந்து வாங்கிய கடனில் 55 வீதம் சீனாவிடமிருந்து பெற்றுக் கொண்ட கடன்தான். இப்படியான சூழலில் சீனா கடன் மறுசீரமைப்புக்கு போகுமானால், சீனாவிற்கு அது ஒரு பின்னடைவாக அமையலாம்.

சீனா, இலங்கை உட்பட பல தீவு நாடுகளுக்கு கடனுதவிகளை வழங்கியுள்ளது. சீனாவின் கடனானது, துறைமுகங்கள், விமான நிலையங்கள், வர்த்தக மையங்கள் போன்ற திட்டங்களை மையமாகக் கொண்ட திட்டங்களுக்கே கடனை கொடுத்து வருகின்றது. இலங்கைக்கு கடன் மறுசீரமைப்புக்கு செல்லும் போது, இதனை உதாரணமாக வைத்துக்கொண்டு, ஏனைய நெருக்கடியிலுள்ள நாடுகளும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கோரிக்கை விடுப்பார்கள். அதனை சீனாவினால் கையாள முடியாது என்பதே முக்கியமான காரணங்களாக காணப்படுகின்றன.” என ஊடகவியலாளர் யசிஹறன் தெரிவிக்கின்றார்.

சீனா கடன் மறுசீமைப்புக்கு ஆதரவு தெரிவிக்காது என கூறிய நிலையில், தற்போது இலங்கைக்கு ஆதரவு வழங்கியுள்ளது. அதற்கான காரணம் என்ன? எனக் கேட்டபோது,

“நெருக்கடியிலுள்ள இலங்கைக்கு தாங்கள் ஒத்துழைப்பு வழங்குவோம் என சொல்லியிருக்கின்றார்கள். கடனை சீனா, மறுசீரமைக்கிறதா? அப்படியில்லை என்றால், கடனை நிறுத்தி வைக்கிறார்களா? என்ற நகர்வு இருக்கிறது. கடனை இரண்டு வருடங்களுக்கு நிறுத்தி வைத்தால் இரண்டு வருடங்களுக்கு கடனை கொடுக்கத் தேவையில்லை.

கடனை இரண்டு வருடங்களுக்கு பின்னர் செலுத்த வேண்டும். மற்றைய விடயம், குறுகிய காலத்திற்கு கடனை நிறுத்தி வைப்பதே இந்த முறைமையாகும். கடன் மறுசீரமைப்பு என்பது, உதாரணத்திற்கு சீனாவிற்கு வழங்க வேண்டிய எஞ்சிய கடனை, சுமார் 10 வருடங்களுக்கு நீட்டித்து, புதிதாக ஒரு கடன் திட்டத்தை வகுத்தல். அந்த திட்டத்தில் கடன் கொடுக்கும் அளவு குறையும்.

ஆனால், காலங்கள் நீடிக்கும். இது தான் மறுசீரமைப்பாகும். சீனாவின் தற்போதைய அறிவிப்பதானது, கடனை இரண்டு வருடங்களுக்கு நிறுத்தி வைத்தலாகும். அதாவது இரண்டு வருடங்களின் பின்னர் கடனை கொடுக்க வேண்டி வரும். சீனா இந்த முறையின் கீழ் வருகின்றது. ஆனால் இந்தியா அந்த முறையின் கீழ் வரவில்லை.

இந்திய மறுசீரமைப்பு என்ற திட்டத்திற்குள் வந்துள்ளார்கள். இந்த அறிவிப்பை சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கிதான் அறிவித்துள்ளது” என அவர் கூறுகின்றார்.

கடன் மறுசீரமைப்பு - கடன் நிறுத்தி வைத்தல் இந்த இரண்டு முறைகளில் இலங்கைக்கு சாதகமானது, பாதகமானது எது? என்று கேட்டபோது,

“கடன் மறுசீரமைப்பு - கடன் நிறுத்த வைத்தல் இந்த இரண்டிலும், இலங்கை கடனை மீள கொடுக்கதான் வேண்டும். சாதகம் பாதகம் என பார்க்க முடியாது. இலங்கைக்கு தற்காலிக தீர்வு அவசியமாக காணப்படுகின்றது. அதனால், இந்த இரண்டில் எதை கொடுத்தாலும், இலங்கைக்கு தற்போது அது சாதகமானதாகவே அமையும். ஏனெனில், ரொம்ப பெரிய கடன் நெருக்கடியில் உள்ள நாடு என்பதனால், எந்த வாய்ப்பு கிடைத்தாலும் அது இலங்கைக்கு சாதகம் தான்” என ஊடகவியலாளர் யசிஹறன் தெரிவிக்கின்றார்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனை பெற்றுக்கொள்வதற்கு இந்தியாவின் ஆதரவு முதலில் கிடைத்த பின்னரே, சீனா தனது அறிவிப்பை வெளியிடுகிறது. ஏன் இந்தியாவின் அறிவிப்பு வரும் வரை சீனா காத்திருந்தது? என்று கேட்டதற்கு,

“இலங்கை விவகாரத்தில் இந்தியா, சீனா ஆகிய நாடுகளின் நகர்வுகள் இன்று நேற்று அல்ல, ஒவ்வொரு காலக்கட்டத்திலும் இரண்டு நாடுகளும் ஏட்டிக்கு போட்டியாக நடந்துக்கொள்ளும் சூழ்நிலை காணப்பட்டது. கடன் மறுசீரமைப்பில் கூட சுயநலன்தான் இருக்கின்றது.

இந்தியா கூட பொதுநலத்தில் இலங்கைக்கு உதவ முன்வரவில்லை. சீனாவும் பொது நலத்தில் இலங்கைக்கு உதவி செய்ய முன்வரவும் இல்லை. இந்த இரண்டு நாடுகளும் உலக வல்லரசு நாடுகள். இந்த இரண்டு நாடுகளுக்கும் இலங்கை என்பது மிகப் பெரிய சொத்து.

இலங்கை ஏதாவது ஒரு நாட்டின் பக்கம் சாய்ந்தால் கூட, மற்றைய நாட்டிற்கு அது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். பூகோள அரசியலிலும் சரி, உள்நாட்டு அரசியல் காரணங்களிலும் பாரிய தாக்கத்தை செலுத்தும். அதனால், இலங்கைக்கு கூடுதலாக உதவிகளை செய்வது போல, அதிகளவிலான கடனை கொடுத்து யார் தமது கைக்குள் வைத்துக்கொள்வது என்ற போட்டியே இங்கு காணப்படுகின்றது.

இந்த இரண்டு நாடுகளும் இலங்கையை பகடை காய்களாக பயன்படுத்தி வருகின்றன” என ஊடகவியலாளர் யசிஹறன் குறிப்பிட்டார்.

### மூன்று மாதங்களுக்குள் கடன் மறுசீரமைப்பு நிறைவடையும்

எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று மாத காலப் பகுதிக்குள் இந்த கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளை நிறைவு செய்ய முடியும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

சீனாவுடனான பேச்சுவார்த்தைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாகவும் அவர் கூறுகின்றார். (பிபிசி)

# "சுதந்திரத்துக்கான பாதை" கண்காட்சி திறந்து வைப்பு





கொழும்பு, பெப். 06

75 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "சுதந்திரத்திற்கான பாதை" புராதன பொருள் கண்காட்சி கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தில் இடம்பெற்றுவருகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், இந்தக் கண்காட்சி நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தேசிய அருங்காட்சியகம், தொல் பொருள் திணைக்களம் மற்றும் மத்திய கலாசார நிதியம் ஆகியன இணைந்து இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளன.

இந்தக் கண்காட்சி கொழும்பு அருங்காட்சியகத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை, தினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது.

(ஐ)

# பிரசித்திபெற்ற நகுலேஸ்வரம் ஆலய திருவிழா நேற்று ஆரம்பம்!



யாழ்ப்பாணம், பெப். 06

வரலாற்று சிறப்புமிக்க பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தின் கொடியேற்றம் நேற்று நடைபெற்றது.

விநாயகப் பெருமான் மற்றும் நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வர சுவாமி மற்றும் முருகப் பெருமான் வள்ளி தெய்வானை, சண்டேஸ்வர மூர்த்தி ஆகியோருக்கு வசந்த மண்டப பூஜைகள் நடைபெற்று மூர்த்திகள் உள் வீதி எழுந்தருளினர்.

மங்கள வாத்தியங்கள் முழங்க பிராமணர்களின் வேத பாராயண மந்திர உச்சாடனங்களுடன் நகுலேஸ்வரப் பெருமானின் கொடியேற்றம் இனிதே நடைபெற்றது.

15 நாட்களுக்கு நடைபெறவுள்ள இந்தத் திருவிழாவில், எதிர்வரும் 17ஆம் திகதி சப்பைரதத் திருவிழாவும் 18ஆம் திகதி சிவராத்திரி தினத்தன்று தேர்திருவிழாவும் 19ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

# அழுத்தம் கொடுப்பதை நிறுத்த வேண்டும்!

## நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, பெப். 06

கடினமான சூழ்நிலையில் பொருளாதார நிலைமையை நிர்வகிக்கும் நேரத்தில் தேர்தலுக்கு நிதி வழங்குமாறு திறைசேரி அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுப்பதை பல்வேறு பிரிவினரும் நிறுத்த வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

இதுபோன்ற அழுத்தங்களைக் கொண்டுவரும் பல்வேறு பிரினரும் சம்பளம், ஓய்வூதியம், சமூகப் பலன்கள் மற்றும் மருந்துகளை வாங்குவதற்கு அரசாங்கம் நிதி திரட்டுவதில் உள்ள சிரமங்களை உணர வேண்டும் என்றார்.

செலவினங்களைக் குறைத்து, கிடைக்கும் நிதியை நிர்வகிப்பதுடன், பொருளாதாரத்தை மீட்டெடுக்க அரசாங்கம் சாதகமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்றும் தற்போதைய நிலைமையை சமாளிக்காவிட்டால் மீண்டும் எரிவாயு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்றும் தெரிவித்தார்.

இந்த வருட இறுதிக்குள் பொருளாதாரம் புத்துயிர் பெறும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுவதாகவும் சர்வதேசத்தின் உதவிகள் வந்துகொண்டு இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

# கோடீஸ்வரர் கொலை; இளைஞர் ஒருவர் கைது

கொழும்பு, பெப். 06

தலங்கமை பிரதேசத்தில் வீடொன்றின் நீச்சல் தடாகத்தில் மர்மமான முறையில் உயிரிழந்த கோடீஸ்வர வர்த்தகரின் கொலை சம்பவம் தொடர்பில் கந்தானையை சேர்ந்த 22 வயதான இளைஞன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பத்தரமுல்லை பெலாவத்தை பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடொன்றின் நீச்சல் தடாகத்தில் இருந்து வீட்டின் உரிமையாளரான வர்த்தகரின் சடலம் கடந்த 2ஆம் திகதி கைப்பற்றப் பட்டது.

உயிரிழந்தவர் பிரபல ஆடையகம் ஒன்றின் உரிமையாளரான தொழிலதிபர் அந்த வீட்டுக்கு செல்வதாக தனது சகோதரியிடம் கூறிவிட்டு கடந்த மாதம் 31 ஆம் திகதி சென்றுள்ளார். அவர் மீண்டும் திரும்பவில்லை. இதனையடுத்து முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் அவரின் சடலம் நீச்சல் தடாகத்தில் இருந்து மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## கல்வி tv CHANNEL-1

### 06.02.2023 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

### 06.02.2023 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# இனப் பிரச்னை தீர்வுக்கான முயற்சி எந்த சமூகத்தையும் பாதிக்கக்கூடாது!



## கல்முனை மாநகர முதல்வர்

நிந்தவூர், பெப். 06

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கான அரசமைப்புத் திருத்தங்கள் எந்தவொரு சமூகத்துக்கும் பாதிப்பாக அமைந்து விடக்கூடாது என்று கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ. எம். றகீப் வலியுறுத்தியுள்ளார்.

கல்முனை மாநகர சபை ஒழுங்கு செய்திருந்த 75ஆவது சுதந்திர தின விழாவில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ், சிங்களத்தில் தேசிய கீதம் இசைக்கப்பட்டமையை தொடர்ந்து நிகழ்வுகள் இடம் பெற்றன. இதன் பின்னர் உரையாற்றிய அவர், "இந்த நாட்டில் சிறுபான்மையினர் மீதான பாரபட்சங்கள் தொடர்கின்ற நிலையில் சிறுபான்மைச் சமூகத்தினர் நாட்டின் சுதந்திர தினத்தை கொண்டாடத்தான் வேண்டுமா என்று சிலர் கேள்வி எழுப்புவதைக் காண முடிகிறது. ஆனால், சுதந்திர தினக் கொண்டாட்டம் என்பது ஆட்சியாளர்களுக்கானதோ அல்லது பெரும்பான்மை சமூகத்தினருக்கானதோ அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நாட்டின் சுதந்திரத்துக்காக சிங்கள, தமிழ், முஸ்லிம் தலைவர்கள் அனைவரும் இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் ஒன்றிணைந்தே போராடினார்கள். அதுவே, நாட்டுக்கு சுதந்திரத்தை பெற்றுத்தந்தது. இலங்கைத் திருநாடானது சிறுபான்மையினரான எமக்கும் சொந்தமான தேசமாகும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதை நாங்கள் விட்டுக் கொடுக்க முடியாது.

நாட்டில் புரையோடிப்போயுள்ள தேசிய இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும். அதன் மூலம் சிறுபான்மை சமூகங்கள் வேண்டி நிற்கின்ற உரிமைகள், அபிலாஷைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட வேண்டும்.

இன்றைய நாட்களில் இனப்பிரச்னைத் தீர்வு தொடர்பிலும் அதற்கான அரசமைப்பு திருத்தங்களை அமுல்படுத்துவது பற்றியும் அதிகம் பேசப்படுகிறது. நாட்டின் பொருளாதார மீட்சிக்காக சர்வதேசத்தின் உதவியை நாடி நிற்கின்ற எமது அரசாங்கம், அதன் அழுத்தங்களுக்கு உட்பட்டே சில விடயங்களை செய்வதற்கு முனைப்புக் காட்டுவதாக அறிய முடிகிறது. இந்த விடயத்தில் எந்தவொரு சமூகத்துக்கும் அநீதி இழைப்பதற்கு இடமளிக்கக்கூடாது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்துகின்றேன்- என்றார்.

இந்நிகழ்வில் பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாகத் அலி, கல்முனை வலய கல்விப் பணிப்பாளர் சஹ்துல் நஜீம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் சரத் சந்திரபால, மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே. ஏ. எல். எஸ். தயந்தி, கல்முனை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ. றபீக், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். எல். சம்சுதீன், கல்முனை பிரதம பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.ஏ.வாஹித் மற்றும் முப்படை அதிகாரிகளுடன் மாநகர சபை உறுப்பினர்கள், அரச, தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர். (ஐ - 06)

# நிந்தவூரில் சிறப்புற நடந்தது சுதந்திர தின கொண்டாட்டம்!

நிந்தவூர், பெப். 06

இலங்கையின் சுதந்திரத்திற்காக பெரும்பான்மை சிங்களத் தலைவர்களுடன், தமிழ், முஸ்லிம் தலைவர்களும் இணைந்து குறைவில்லாப் பங்களிப்புச் செய்தமையை எவரும் மறுத்தலித்து விட முடியாது. அவர்களது தியாகங்கள் சுதந்திர தினத்தில் நினைவு கூரப்படுவதும் முக்கியமானதாகும்.



இவ்வாறு, நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லத்தீப் கூறினார்.

நிந்தவூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இலங்கையின் 75ஆவது சுதந்திர தின நிகழ்வுக்கு தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "இலங்கையின் வரலாற்றை நோக்கினால் நாட்டின் மூவின மக்களும் சுதந்திரத்திற்காகத் தியாகத்துடன் போராடியுள்ளனர். இதன்படி, அன்று நாட்டின் சுதந்திரத்துக்காகப் போராடிய சிங்களத் தலைவர்களுக்கு எந்த வகையிலும் குறைவில்லாமல் தமிழ், முஸ்லிம் தலைவர்களும் போராடியே நாம் சுதந்திரத்தைப் பெற்றோம் என்பதை வரலாறு சான்றுபகர்கின்றது.

இதேபோல் தேசியக் கொடி, தேசியக் கீதம் என்பவற்றுக்கும் நாம் கௌரவமளிக்க வேண்டும். இதேவேளை சுதந்திரம் பெற்ற பின்பும் நாம் எதிர்நோக்கும் சவால்களை முக்கிய கவனத்தில் கொள்ள வேண்டும். பிரதேச செயலகங்களின் வினைத்திறனான சேவைகள் மிகஅவசியமாகும். இதற்கென சம்பளம் பெறும் உத்தியோகத்தர்கள், ஊழியர்களாகவின்றி நாட்டின் வளர்ச்சிக்கும் மக்களது வறுமை ஒழிப்புக்கும் எமது சேவைகளைத் தொடர வேண்டும் - என்றார்.

**பிரதேச சபையில்...**

இதேவேளை 75 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நிந்தவூர் பிரதேச சபையிலும் சிறப்பாக நடைபெற்றது.

தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹிர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், சுதந்திர தின ஞாபகர்த்த மரநடுகையும் இடம் பெற்றது.

**இளைஞர் சம்மேளனம்**

மேலும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிந்தவூர் இளைஞர் கழக சம்மேளனம் சுதந்திர தின சிரமதானப் பணி ஒன்றை முன்னெடுத்தது.

இளைஞர் சேவை உத்தியோகத்தர் எம்.ஐ.எம். பரீதின் வழிகாட்டுதலிலும், சம்மேளனத்தலைவர் எஸ்.எல்.எம்.நாசிறூன் தலைமையிலும் இடம் பெற்ற இந்த சிரமதான நிகழ்வில் நிந்தவூர் கடற்கரைப் பிரதேசம் சுத்தம் செய்யப்பட்டது.(ஐ-06)

# இஸ்லாமிய சிறுபராய திருமணம் தலைமைகளுக்கே தெளிவில்லை!

## அதாஉல்லா எம். பி. தெரிவிப்பு

கல்முனை, பெப். 06

சிறுபராய திருமணங்கள் தொடர்பில் இஸ்லாமியர்களை கொச்சைப்படுத்துகின்ற ஜே. வி. பி. கட்சியின் செயல்பாடு மேலோங்க காரணம் முஸ்லிம் தலைமைகளுக்கே இவ்விடயம் தொடர்பாக தெளிவில்லை என்பதே ஆகும் என தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ. எல். எம். அதாஉல்லா குறிப்பிட்டார்.

அக்கரைப்பற்றில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், முஸ்லிம்கள் சிறு பாராய திருமணங்களை தவிர்த்து அவர்களுடன் இணைந்து செயல்பட முஸ்லிம் மக்களை அழைத்துள்ளதாக அறிகின்றேன். இதற்கு காரணம் முஸ்லிம் தலைமைகளுக்கே இவ்விடயம் தொடர்பாக தெளிவில்லை என்பதே ஆகும்.18 வயதில்தான் திருமணம் செய்ய வேண்டும் என இஸ்லாம் கூறவில்லை. ஒரு மார்க்கமும் சொல்லவில்லை. அதாவது ஒரு பெண் பருவமடைந்தால் அவள் அனைத்துக்கும் தகுதியானவள். 35 வயது முதல் 45 வயது வரையுள்ள பெண்களுக்கே மணமகன் இன்மை காணப்படுகின்றது.

இஸ்லாத்தை கொச்சைப்படுத்தும் நோக்குடன் முஸ்லிம்கள் இளவயதில் திருமணம் செய்கின்றார்கள் என்கின்ற கதைகளையெல்லாம் இஸ்லாமை புரியாதவர்கள் பரப்பிக்கொண்டு இருக்கின்றனர். இதற்கு றவூப் ஹக்கீம் உட்பட சில அமைச்சர்கள் 17 வயதில் அல்ல 18 வயதில்தான் திருமணம் முடிக்க வேண்டும் என பைத்தியமாக கூறி வருகின்றனர். ஆனால், நான் இவ்விடயம் குறித்து நீதியமைச்சின் ஆலோசனை கூட்டத்தில் கடுமையாக எதிர்த்து இருக்கின்றேன்.

ஒரு தேவைக்கு இடமிருக்க வேண்டும். அதாவது எல்லோரும் 15 முதல் 16 வயதில் திருமணத்தை முடிப்பதல்ல. 16 வயதுடைய பெண் ஒருவருக்கு தேவை இருக்கின்ற பட்சத்தில் நீதிமன்றம் சென்று குறிப்பிட்ட விடயத்தை கூறி - நிரூபித்து திருமணம் முடிக்க அனுமதிக்க வேண்டும் என அங்கு குறிப்பிட்டு இருக்கின்றேன். இஸ்லாமியர்களை இவ்விடயத்தில் கொச்சைப்படுத்துகின்ற ஜே. வி. பியின் உரைகளுக்கு நாம் இடமளிக்க முடியாது - என்றார். (ஐ-01)

# எரிவாயு சிலிண்டர்களை திருடிய மூன்று சந்தேகநபர்கள் கைது!

கல்முனை, பெப். 06

எரிவாயு சிலிண்டர்கள் மற்றும் நீர் பம்பிகளை திருடி விற்பனை மூவர் குழுவை நிந்தவூர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை - நிந்தவூர் பொலிஸ் பிரிவில் வீடுகளுக்குள் கூரையை பிரித்து நுழையும் இவர்கள் எரிவாயு சிலிண்டர்கள், மோட்டர்களை களவாடி விற்பனை செய்து வந்துள்ளனர்.

இது தொடர்பில், பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் விசாரணை செய்த பொலிஸார் இந்த மூவர் குழுவை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 17 எரிவாயு சிலிண்டர்கள் , 05 நீர் இறைக்கும் மோட்டர்கள், சைக்கிள், சுவர் வெட்டும் இயந்திரம் என்பன மீட்கப்பட்டன.

கைதான சந்தேகநபர்கள் 21, 23 வயதினர். அத்துடன், இவர்களிடமிருந்து பொருட்களை பெற்ற 26 வயது நபரும் கைது செய்யப்பட்டார். (ஐ-01)

# ஓர் ஏக்கர் கஞ்சா செய்கை; அம்பாறையில் எரித்து அழிப்பு!

கல்முனை, பெப். 06

அம்பாறை பக்மிட்டியாவ வனப்பகுதியில் செய்கை செய்யப்பட்ட ஓர் ஏக்கர் கஞ்சா தோட்டம் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது.



அக்கரைப்பற்று இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய இராணுவ புலனாய்வுப் பிரிவினர் மற்றும் அறுகம் குடா விசேட அதிரடிப்படையினர் இணைந்து இந்த கஞ்சா தோட்டத்தை கைப்பற்றினர்.

இதன்போது, சுமார் 7,500 கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவை ஒவ்வொன்றும் சுமார் 3-6 அடி என உயரம் வரை வளர்ந்திருந்தன என்றும் அவை முழுமையாக படையினரால் எரித்து அழிக்கப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-01)

ஈழநாடு



# வியாழன் கிரகத்தில் மேலும் 12 நிலவுகள்!



நியூயோர்க், பெப். 06

வியாழன் கிரகத்துக்கு உரித்தான மேலும் 12 நிலவுகள் (துணைக்கோள்கள்) அமெரிக்க வானியல் அறிஞர்களால் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம், சூரிய குடும்பத்திலேயே அதிகபட்சமாக 92 சந்திரன்களுடன் வியாழன் கிரகம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. 83 சந்திரன்களுடன் முதலிடத்தில் இருந்த சனி கிரகம் 2ஆம் இடத்துக்கு தள்ளப்பட்டது.

அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் அமைந்துள்ள கார்னெகி அறிவியல் நிறுவனத்தின் வானியல் அறிஞர்களால் நடத்தப்பட்ட ஆய்வில் புதிய 12 நிலவுகளும் கண்டு பிடிக்கப்பட்டன. சர்வதேச வானியல் ஒன்றியத்தின் சிறு கிரக மையம் நிர்வகிக்கும் சிறு கிரகங்களின் பட்டியலில் இந்தப் புதிய 12 நிலவுகளும் இணைக்கப்பட்டன.

இது தொடர்பாக ஆய்வுக் குழுவில் இடம்பெற்ற அமெரிக்காவின் பிரபல வானியல் அறிஞர் ஸ்கொட் ஷெப்பர்ட் கூறுகையில், '2021 மற்றும் 2022-ஆம் ஆண்டுகளில் ஹவாய் மாகாணம் மற்றும் சிலி நாட்டில் அமையப் பெற்ற தொலைநோக்கிகள் மூலமாக நடத்தப்பட்ட ஆய்வில் புதிய நிலாக்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

அனைத்து நிலவுகளும் 1 கி.மீ. முதல் 3 கி.மீ. வரை அளவு கொண்ட சிறிய அளவிலான கிரகங்கள். சனி மற்றும் வியாழன் கிரகங்களைச் சூழந்து இருக்கும் சிறிய நிலவுகள் ஒன்றோடு ஒன்று மோதியோ அல்லது வான் கோள்களுடன் மோதியோ புதிய நிலவுகள் உருவாகி இருக்கக்கூடும். இருப்பினும், இந்த நிலவுகளின் தோற்றம் குறித்து வரும் காலங்களில் விரிவான ஆய்வு நடத்தப் படும். புதிய நிலவுகளுக்கு இன்னும் பெயர்கள் சூட்டவில்லை' என்றார் ஸ்கொட்.

(ஐ)

## உக்ரைனின் புகழ்பெற்ற

# உப்பு சுரங்கங்கள் நகரம் ரஷ்ய படைகளின் வசம்!

கீவ், பெப். 06

உக்ரைனின் கிழக்கில் 'உப்பின் கொடை' (a gift of salt) என்று அழைக்கப்படும் புகழ்பெற்ற உப்புச் சுரங்கங்கள் நிறைந்த சோலேடர் மற்றும் பாக்முட் நகரங்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றிவிட்டன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரஷ்யாவின் சக்தி வாய்ந்த 'வாக்னர்' என அழைக்கப்படும் தனியார் கூலிப்படைகளே கடும் சண்டைக்கு பின்னர் இந்த நகரங்களை கைப்பற்றின.

அண்மைய நாட்களாக உக்ரைன் அரசு இதை மறுத்த நிலையில், அங்கு மோதல்கள் தொடர்கின்றன என்று கூறி வந்தது. எனினும், உக்ரைன் இராணுவப் பேச்சாளர் ஒருவர் சோலேடர் நகரம் எதிரியிடம் வீழ்ந்ததை ஒப்புக்கொண்டுள்ளார்.

கடந்த பல மாதகாலமாக கட்டாயத்தின் பேரிலும் சிறைகளில் இருந்தும் திரட்டி ஆட்சேர்ப்புச் செய்த ஆயிரக்கணக்கான தொண்டர் படைகள் சகிதம் வாக்னர் தனியார் இராணுவக் கூலிப் படைகள் பாக்முட் மற்றும் சோலேடர் நகரங்கள் மீது எண்ணுக்கணக்கற்ற பல தாக்குதல்களையும் எறிகணை வீச்சுகளையும் நடத்தி அவற்றைக் கைப்பற்ற முயன்று வந்தன.

இதனால் உல்லாசப் பயணிகளைக் கவருகின்ற உப்புச் சுரங்கங்கள் மற்றும் கனிமக் குகைகள் நிறைந்த அந்தப் பிரதேசம் பேரழிவுகளை சந்தித்தது. இரண்டு தரப்புகளிலும் பலத்த உயிர் சேதங்கள் ஏற்பட்டன என்றும் அறிய வருகிறது.

சோலேடர் உப்புச் சுரங்கங்கள் உலகின் உப்புத் தேவையில் பெரும் பங்கை நிறைவு செய்பவை.



சோவியத் ஒன்றிய காலத்தில் அதன் நாற்பது சதவீதமான உப்புத் தேவையைப் பூர்த்திசெய்து வந்தன. போர் தொடங்கும் ன்னர் உக்ரைனுக்குத் தேவையான 99 வீதமான உப்பை அந்தச் சுரங்கங்களே வழங்கி வந்தன.

சோலேடர் உப்புச் சுரங்கங்களின் இழப்பு பொருளாதார ரீதியில் அதிக முக்கியத்துவம் கொண்டது அல்ல. ஆனால் அங்குள்ள நிலத்தடி நகரங்கள் இராணுவ ரீதியில் ரஷ்யாவுக்கு சாதகமான பல கள நிலைமைகளை கொண்டவை. நிலத்தடியில் படைகளையும் வாகனங்களையும் பாதுகாப்பாக நிலைகொள்ளச் செய்வதற்கு ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட வலையமைப்புக் கொண்ட உப்பு கனிமச் சுரங்கங்கள் புவியியல் ரீதியில் வாய்ப்பானவை என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் பர்வேஸ் முஷாரப் டுபாயில் காலமானார்!



டுபாய், பெப். 06

பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளரும் பின்னாளில் அந்த நாட்டின் ஜனாதிபதியுமான பர்வேஸ் முஷாரப் உடல் நலக்குறைவால் டுபாயில் நேற்று காலமானார். அவருக்கு வயது 79 ஆகும்.

நீண்ட காலமாக உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்தார்.

1943இல் சுதந்திரத்துக்கு முன்பு புதுடெல்லியில் பிறந்தார் பர்வேஸ் முஷாரப். தேச பிரிவினையின்போது முஷாரப் குடும்பம் பாகிஸ்தானின் கராச்சிக்கு இடம்பெயர்ந்தது.

1964 இல் பாகிஸ்தான் இராணுவத்தில் சேர்ந்த முஷாரப் படிப்படியாக உயர்ந்து தலைமை தளபதியானார். நவாஸ் ஷெரீப் ஆட்சியை கவிழ்த்து 1999இல் அதிகாரத்தை கைப்பற்றினார் .

இராணுவ ஆட்சியை பிரகடனம் செய்த முஷாரப், பாகிஸ்தான் பாராளுமன்றதை கலைத்து அரசியல் சட்டத்தையும் முடக்கினார். 2001இல் பாகிஸ்தான் ஜனாதிபதியாக பதவியேற்ற முஷாரப், காஷ்மீர் பிரச்னைக்காக இந்தியாவுடன் பேச்சு நடத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)



# சீனாவின் உளவு பலூனை சுட்டு வீழ்த்தியது அமெரிக்கா!

நியூயோர்க், பெப். 06

தனது வான்பரப்பில் நுழைந்து பறந்த சீனாவின் உளவு பலூன் ஒன்றை அத்திலாந்திக் சமுத்திரத்துக்கு மேலே வைத்துச் சுட்டு வீழ்தியுள்ளதாக அமெரிக்கா அறிவித்திருக்கிறது.

சில தினங்களாக அமெரிக்காவின் தெற்கு மாநிலங்களின் மேலாக வானில் சந்திரன் போன்ற வட்ட வடிவில் தென்பட்ட அந்த பலூனை அமெரிக்க பாதுகாப்பு துறையான பென்ரகன் சீனாவின் உளவு ஊர்தி என்று அறிவித்திருந்தது.

அதனைத் தீவிரமாகக் கண்காணித்தும் வந்தது. சிதைவுகள் முக்கிய இலக்குகள்மீது வீழ்ந்து சேதங்களை ஏற்படுத்தி விடலாம் என்பதால் அதனைத் தரைப் பகுதிகளுக்கு மேலே வைத்துத் தாக்கி வீழ்த்துவதை படை அதிகாரிகள் தவிர்த்திருந்தனர். இந்நிலையில், பலூன் அத்திலாந்திக் சமுத்திரத்தில் நுழைந்த நிலையில் அது சுட்டு வீழ்த்தப்பட்டது.

சுடப்பட்ட சமயம் பலூன் சுமார் 60 ஆயிரம் அடிகள் உயரத்தில் பறந்துகொண்டிருந்தது. பெரிய வெடிச் சத்தத்தை அடுத்து அது கீழே விழத் தொடங்குவதையும் போர் விமானங்கள் அருகே பறப்பதையும் காட்டுகின்ற படங்களை தொலைக்காட்சிகள் வெளியிட்டுள்ளன.

ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட இது போன்ற இராட்சத பலூன்களைச் சுட்டு வீழ்த்துவது இலகுவானது அல்ல என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

பலூனை குண்டுகள் துளைத்தாலும் அது உடனடியாக கீழே விழவும் வாய்ப்பில்லை. வாயு வெளியேறும் வரையும் அதற்குப் பின்னரும் அது விண்ணில் நீண்ட நேரம் மிதந்து கடைசியில் தாக்கப்பட்ட இடத்துக்கு மிகத் தொலைவில் எங்காவது ஓரிடத்தில் போய் விழும். சிதைவுகளை தேடி அறிவதும் கடினமாகும்.

(ஐ)

## உளவு பலூன் எதிரொலி;

# அமெரிக்க வெளியுறவு செயலரின் சீனாவுக்கான பயணம் இரத்து

வாஷிங்டன், பெப். 06

அமெரிக்காவின் மோண்டானாவில் உள்ள அணுசக்தி ஏவுதளத்தில் சீனாவின் உளவு பலூன் பறந்த விவகாரத்தை அடுத்து அமெரிக்க வெளியுறவுச் செயலர் அன்ரனி பிளிங்கன் தனது சீன பயணத்தை இரத்து செய்துள்ளார்.

சீன உளவு பலூன் பறக்க விடப்பட்டது அமெரிக்க இறையாண்மைக்கு எதிரான திட்டமிட்ட தெளிவான அத்துமீறல் என்று அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இந்த உளவு பலூன் 3 பெரிய பேருந்துகளை ஒன்றாக சேர்த்தது போன்ற அளவுக்குப் பெரியது என்று அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.





# ஒரு ஓவரில் 26 ஓட்டங்கள் விளாசிய பொலார்ட்!

அபுதாபி, பெப். 06

அபுதாபியில் நடைபெற்றுவரும் ஐ. எல். ரி. இருபது - 20 போட்டியில் மும்பை எமிரேட்ஸ் மற்றும் அபுதாபி நைட் ரைடர்ஸ் அணிகள் விளையாடிய போட்டியில் பொலார்ட் அட்டகாசமாக விளையாடினார்.

மும்பை எமிரேட்ஸ்ஸின் தலைவரான பொலார்ட், ரஸல் வீசிய ஒரு ஓவரில் 26 ஓட்டங்களை எடுத்து அசத்தினார்.

17 பந்துகளில் 43 ஓட்டங்களை எடுத்து அணியின் வெற்றிக்கு வித்திட்டார். மேலும் ஆட்டநாயகன் விருதையும் பெற்றார்.

மும்பை எமிரேட்ஸ் 20 ஓவரில் 180 - 4 ஓட்டங்களை எடுத்தது. இதில் மொஹமது வசீம் 60 ஓட்டங்களை எடுத்தார். பொலார்ட் 43 ஓட்டங்கள்.

அடுத்து ஆடிய அபுதாபி நைட் ரைடர்ஸ் அணி 19.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 162 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. பிராவோ 3 விக்கெட்களை எடுத்து அசத்தினார்.

இந்த வெற்றியின் மூலம் பொலார்ட் அணி ப்ளே - ஒவ்வுக்கு தெரிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# 6 பந்துகளில் 6 சிக்ஸர்கள் பாகிஸ்தான் வீரர் அபாரம்!



இஸ்லாமாபாத், பெப். 06

பாகிஸ்தானில் நடைபெற்ற பி. எஸ். எல். போட்டியின் பயிற்சி ஆட்டத்தில் (காட்சி கிரிக்கெட்) பெஷாவர் அணியை சேர்ந்த வஹாப் ரியாஸ் பந்துவீச்சில் இப்திகார் அகமது கடைசி ஓவரில் 6 பந்துகளில் 6 சிக்ஸர்கள் அடித்து அசத்தியுள்ளார்.

கிளாடியேட்டர்ஸ் அணியை சேர்ந்த இப்திகார் 50 பந்துகளில் 94 ஓட்டங்கள் எடுத்தார். குஷ்தில் ஷா 36 ஓட்டங்களை எடுத்தார். 20 ஓவர் முடிவில் 184 ஓட்டங்கள் எடுத்தது.

பாபர் அசாமின் (பெஷாவர்) அணி 20 ஓவரில் 181 ரன்கள் எடுத்தது. 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சர்பராஸ் அஹமது (கிளாடியேட்டர்ஸ்) அணியினர் கடைசி ஓவரில் த்ரில் வெற்றியடைந்தனர். நஷிம் ஷா சிறப்பாக பந்து வீசினார்.

# இந்தியாவை வீழ்த்த ஆஸிக்கு வாய்ப்பு!

சிட்னி, பெப். 06

இந்தியாவில் நடைபெறவுள்ள அலன் போர்டர் - கவாஸ்கர் கோப்பைக்கான டெஸ்ட் தொடரை வெல்ல ஆஸி. அணிக்கு வாய்ப்புள்ளது என துடுப்பாட்ட ஜாம்பவான் கிரேக் சாப்பல் கூறியுள்ளார்.


இரு அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் நாகபுரியில் 9ஆம் திகதி தொடங்குகிறது. ஆஷஷ் கோப்பை தொடர் போல், ஆஸி.-இந்திய அணிகளுக்கு இடையே போர்டர்-கவாஸ்கர் கோப்பை போட்டி கௌரவமிக்கதாக உள்ளது. இந்நிலையில் இந்தியாவில் டெஸ்ட் தொடரை கைப்பற்றி ஆஸி. கைப்பற்றி 19 ஆண்டுகள் ஆகின்றது.

இதுதொடர்பாக ஜாம்பவான் சாப்பல் கூறுகையில்,

இந்தத் தொடரில் இந்தியாவுக்கு பாதிப்பு ஏற்படும் சூழல் உள்ளது. குறிப்பாக பேஸர் ஜஸ்ப்ரீத் பும்ரா, இளம் வீரர் ரிஷப் பந்த் இல்லாதது பின்னடைவாகும். முதன்முறையாக சொந்த மண்ணில் இந்தியா வலுக் குறைந்து உள்ளது.

விராட் கோலியைதான் அதிகம் சார்ந்திருப்பர். பிங்கர் ஸ்பின்னர் அஷ்டன் அகர், நதன் லயானுடன் இணைந்து பந்துவீசினால் இந்திய துடுப்பாட்ட வீரர்களை சமாளிக்கலாம் என்றார்.

கடந்த 2017இல் கடைசியாக நடைபெற்ற தொடரில் புணேயில் பெரிய வெற்றியை ஆஸி. பெற்றிருந்தது. ஆனால் 1-2 என தொடரை இழந்தது.





# எவர்டன் அணி அபாரம் ஆர்சனலுக்கு அதிர்ச்சி

லண்டன், பெப். 06

இங்கிலாந்தின் பிறீமியர் லீக் உதைபந்து ஆட்டம் ஒன்றில் பலம் வாய்ந்த ஆர்சனல் அணியை 1-0 என்ற கோல் கணக்கில் அதிர்ச்சி தோல்வி அளித்தது எவர்டன்.

இரு அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சனிக்கிழமை இரவு மன்செஸ்டரில் நடைபெற்றது. தொடக்கம் முதலே இரு அணிகளும் கோல் போட மேற்கொண்ட முயற்சிகள் பலன் தரவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் எவர்டன் வீரர் ஜேம்ஸ் டர் கோவ்ஸ்கி 60ஆவது நிமிடத்தில் அற்புதமாக கோலடித்தார். இதனால் எவர்டன் 1-0 என முன்னிலை பெற்றது. அதிர்ச்சி அடைந்த ஆர்சனல் வீரர்கள் பதில் கோலடிக்க முயன்றும் எவர்டன் தற்காப்பு அரணை தகர்க்க முடியவில்லை. இதனால் 1-0 என தோல்வி அடைந்தது.

ஏனைய ஆட்டங்களில் மன்செஸ்டர் யுனைடெட் 2-1 என கிறிஸ்டல் பேலஸையும், பிரைட்டன் 1-0 என போர்ன்மௌத்தையும், பிரென்ட்போர்ட் 3-0 என சௌதாம்ப்டனையும், வென்றன. நியூ கேஸ்டில்-வெஸ்ட் ஹாம் ஆட்டம் 1-1 என டிராவில் முடிந்தது.

# மெஸ்ஸி அசத்தல் பி. எஸ். ஜி. வெற்றி!



பாரிஸ், பெப். 06

பிரெஞ்சு லீக் 1 உதைபந்து தொடரில் பி. எஸ். ஜி. -டௌலௌஸ் அணிகள் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் 2-1 என வெற்றி பெற்றது பி. எஸ். ஜி. இரு அணிகளுக்கு இடையிலான ஆட்டம் பாரிஸில் நடைபெற்றது.

ஆட்டத்தின் தொடக்கத்திலேயே 20-ஆவது நிமிஷத்தில் டௌலௌஸ் வீரர் பிராங்கோ வேன் டென் முதல் கோலடித்தார். இதனால் அதிர்ச்சி அடைந்த பி. எஸ். ஜி. வீரர்கள் பதில் கோலடிக்க தீவிரமாக முயன்றனர். இதன் பலனாக 38-ஆவது நிமிடத்தில் அச்ரப் ஹகிமி கோலடித்து 1-1 என சமநிலை ஏற்படச் செய்தார்.

நட்சத்திர வீரர்கள் எம்பாப்பே, நெய்மர் இல்லாத நிலையில், ஜாம்பவான் மெஸ்ஸியையே பி. எஸ். ஜி. அணி பெரிதும் சார்ந்திருந்தது. 57-ஆவது நிமிடத்தில் கர்லிங் ஸ்டரைக் மூலம் அற்புதமாக கோலடித்தார். இதன் மூலம் பி. எஸ். ஜி. வென்று 8 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.





### சுதந்திர தினம் கரிநாள்

# வவுனியாவில் நேற்று பேரணி ஆரம்பமானது

வவுனியா, பெப். 06

**நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கி ஆரம்பமான பேரணிக்கு ஆதரவு தெரிவித்து வவுனியாவில் நேற்று பேரணி ஒன்று நடைபெற்றது.**

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று முன்தினம் ஆரம்பமான பேரணி கிளிநொச்சியை அடைந்தது. இந்தப் பேரணி நேற்று பரந்தனிலிருந்து ஆரம்பமானது.

இந்தப் பேரணியுடன் இணைவதற்காக வவுனியாவிலிருந்து நேற்று பேரணி ஆரம்பமானது. வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் இருந்து ஊர்வலம் ஆரம்பமாகி புதிய பேரூந்து நிலையம் வரை சென்றது. தொடர்ந்து அங்கிருந்து பேருந்து மூலம் பேரணி பயணமானது.

இந்தப் பேரணியில் வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் சிவில் அமைப்பு பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

(ஐ-07)

# பொலிஸாரின் தாக்குதலில் மாணவர்கள் இருவர் காயம்!

முல்லைத்தீவு, பெப். 06

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேவிபுரத்தில் பாடசாலை மாணவர்கள் இருவர்மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

15 வயதான இவர்கள் இருவரும் நண்பரின் பிறந்த தினத்துக்காக தமது வீட்டிலிருந்து 300 மீற்றர் தொலைவிலுள்ள வீட்டுக்கு இரவு வேளை சென்றுள்ளனர்.

முச்சக்கர வண்டியில் அப்பகுதிக்கு வந்திருந்த இரு பொலிஸார் அவர்களை மறித்து அவர்களின் கைபேசிகளை பறித்ததுடன், இருவரும் போதைப் பொருள்கள் பாவித்துவிட்டு வருகிறீர்களா எனக் கேட்டு இருவர் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று மாணவர்கள் கூறியுள்ளனர்.

பொலிஸார் தாக்கியதால் அவர்களின் அழுகை சத்தம் கேட்டு பெற்றோர் அவ்விடத்துக்கு வந்தபோது பொலிஸார் அங்கிருந்து தப்பித்துச் சென்றுள்ளனர்.

இதைத் தொடர்ந்து, தாக்குதலுக்கு இலக்கான இருவரையும் பெற்றோர், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து சென்று முறையிட்டுள்ளனர். அவர்களின் முறைப்பாட்டை பொலிஸார் ஏற்கவில்லை. இதனிடையே மாணவர்களை புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்த்தனர். அங்கிருந்து இருவரும் மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பெற்றோரால் முல்லைத்தீவு உதவி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் சென்று முறைப்பாடு பதிவு செய்ததுடன், மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறையிட்டுள்ளனர். (ஐ)

# சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பு லண்டனிலும் போராட்டம்!

லண்டன், பெப். 06

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றுமுன்தினம் பிரிட்டனின் லண்டனிலும் போராட்டம் நடைபெற்றது.

சுதந்திர தினத்தை கரிநாள் என்று பிரகடனப்படுத்திய பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டங்களுக்கும் அழைப்பு விடுத்தனர்.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாகவும் இலங்கையில் நடந்தது போர் குற்றம் அல்ல திட்டமிட்ட இனப்படுகொலை எனவும்

அதற்கு தீர்வு வேண்டும் என்று வலியுறுத்தியும் லண்டனில் இலங்கை தூதரகம் முன்பாக நூற்றுக்கணக்கானோர் ஒன்றிணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது தமிழர் தாயகத்தின் மீதான ஆக்கிரமிப்பை நிறுத்து, தடைகளை உடைப்போம், தமிழீழம் ஒன்றே தீர்வு, அபகரிக்கப்பட்டுள்ள தமிழர் நிலங்களை திருப்பிக்கொடு, தமிழர் தேசம் எமது அடையாளம் ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டக்காரர்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். (ஐ)

# சுதந்திர தின கொண்டாட்டத்துக்கு 3700 இலட்சம் ரூபாய் தேவையா?

## ஊழலுக்கு எதிரான அமைப்பு கேள்வி

கொழும்பு, பெப். 06

75 ஆவது சுதந்திர தின விழாவில் 3,700 இலட்சம் ரூபாய்க்கு அதிகமாக செலவிடப்பட்டுள்ளதாக இலஞ்சம், ஊழலுக்கு எதிரான சக்தி அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வழங்கிய புள்ளி விபரங்களை ஆராயும் போது இது தெளிவாகும் என்று அதன் தலைவர் ஜமுனி கமந்த துஷார தெரிவித்துள்ளார்.

பொது நிர்வாக அமைச்சின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பல சிவில் அமைப்புக்கள் நடத்திய விசாரணையின் பிரகாரம் அண்மையில் 16.28 கோடி ரூபாய் செலவிடப்படவுள்ளதாக தெரிவித்த அவர், சுதந்திர தின விழா இடம்பெறும் முறைமையின் பிரகாரம் இவ்வாறு தெரிவித்தார்.

சுதந்திர தின விழாவின் செலவுகள் குறித்த விபரங்களைக் கேட்டபோது அதிகாரிகள் தகவல்களை மறைக்க முயன்றனர். நடத்தப்படும், உண்மையான செலவு இதனை விட அதிகமாக இருக்கும். இதனால் இந்த செலவுகளில் ஊழல் மோசடிகள் இருக்கலாம் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அதிகாரிகள் தமக்கும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் செல வினங்கள் தொடர்பாக தெரி விக்காமல் மறைத்தனர் என்றும் சில அதிகாரிகளால் அச்சுறுத்த லுக்கும் ஆளானதாகவும் ஜமுனி கமந்த துஷார கூறியுள்ளார்.

இதன்படி, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு 4 கோடி ரூபாய், கல்வி அமைச்சு 58 இலட்சம் ரூபாய், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு 5. 5 கோடி ரூபாய், அரச தொழிற்சாலைகள் திணைக்களம் 3.9 கோடி ரூபாய், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் செலவு 20 இலட்சம் ரூபாய், மின்சார சபை 2. 1 கோடி ரூபாய் என்றும் அவர் தெரிவித்தார்.

(ஐ-சி)

# 34 ஆயிரம் ஆசிரியர்களுக்கு மார்ச் மாதத்தில் நியமனங்கள்!

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, பெப். 06

மார்ச்சில் புதிய தவணை ஆரம்பிப்பதற்கு முன்பாக 34 ஆயிரம் ஆசிரியர் நியமனங்களை வழங்கவுள்ளதாக கல்விஅமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

இதன்படி, 26 ஆயிரம் பட்டதாரிகளுக்கும், 8 ஆயிரம் கல்வியியல் கல்லூரியிலிருந்து வெளியேறும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கும் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நியமனங்கள் தொடர்பில் அமைச்சரவை மீளாய்வு குழுவில் அனுமதி பெறப்பட்டுள்ளன என்று தெரிவித்த, அமைச்சர் மேலும் கூறுகையில்,

இந்த வருடத்தில் ஒரே தடவையில் 26 ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர். தற்போது அரச சேவையிலுள்ள 40 வயதுக்குக் குறைந்த பட்டதாரிகளே இவ்வாறு நியமிக்கப்படவுள்ளனர். விண்ணப்பங்களுக்காக பெப்ரவரி 10ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானம், கணிதம் உட்பட உயர்தர பாடங்களுக்காக இந்த ஆசிரியர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். அத்துடன் கல்வியியல் கல்லூரியிலிருந்து வெளியேறும் 8 ஆயிரம் பயிற் றப்பட்ட ஆசியர்களும் இணைத்து



கொள்ளப்படவுள்ளனர்.

பாடசாலைகளில் 60 வயது பூர்த்தியடைந்த ஆசிரியர்கள் ஓய்வுபெற்றுள்ள நிலையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் இதன்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4 ஆயிரம் ஆசிரியர்கள் தேசிய பாடசாலைகளுக்கும், 22 ஆயிரம் ஆசிரியர்கள் மாகாண பாடசாலைகளுக்கும் நியமிக்கப்படவுள்ளனர். (ஐ)

# மகிந்த ராஜபக்ஷ பிரதமராகிறார்?

கொழும்பு, பெப். 06

மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக நியமிப்பது தொடர்பில் ஆளும் கட்சிக்குள் கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றன என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

மகிந்த ராஜபக்ஷ மீண்டும் பிரதமராக நியமிக்கப்படுவார் என்று அண்மையில் தகவல்கள் வெளியாகின. பிரதமர் தினேஷ் குணவர்தனவும் எந்த நேரத்திலும் பிரதமர் பதவியை மகிந்தவிடம் ஒப்படைக்க தயாராக இருக்கிறார் என்றும் கூறப்பட்டது.

இதேசமயம், மகிந்த ராஜபக்ஷ மீண்டும் பிரதமர் பதவியை வகிப்பாரா இல்லையா என்பது தொடர்பில் இன்னும் தீர்மானம் எடுக்க



வில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மகிந்த ராஜபக்ஷ மீண்டும் பிரதமர் பதவியை ஏற்பதற்கு பொது ஜன பெரமுனவின் ஒரு குழு உடன் படவில்லை என்றும், இன் னொரு தரப்பினர், மீண்டும் பிரதமர் பதவியை மகிந்த ராஜ பக்ஷ ஏற்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

# நெருக்கடியால் மக்கள் திண்டாட்டம் சுதந்திர தினத்துக்கு 20 கோடி செலவு

கொழும்பு, பெப். 06

நாடு பெரும் பொருளாதார நெருக் கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் பொது மக்கள் தமது அன்றாட அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதில் பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுத் துள்ளனர். அவ்வாறிருக்கையில் சுதந்திர தின நிகழ்வுகளுக்காக அரசாங்கம் 200 மில்லியன் ரூபாயை செலவிட்டுள்ளது.

இந்த நிதியை நாடளாவிய ரீதியில் மருந்து தட்டுப்பாடு நிலவும் மருத்துவ மனைகளுக்கு மருந்து கொள்வனவுக்காக பயன்படுத்தி இருக்கலாம். தற்போது உள்ள ஆட்சியாளர்களிடம் நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் எந்தவொரு ஸ்திரமான கொள்கைகளும் இல்லை என்று எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்டத்திற்கான தேர்தல் பிரசார கூட்டம் 4 ஆம் திகதி சனிக்கிழமை எதிர் கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலை மையில் பாணந்துறையில் நடைபெற்ற து.

இதன்போது கலந்து கொண்டு கருத்

## சரத் பொன்சேகா

துத் தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

நாங்கள் ஒவ்வொரு கூட்டங்களுக்கு செல்லும் போதும் மக்கள் தாம் முகங் கொடுக்கும் பிரச்னைகளை மறைத்து எமது முகங்களை பார்த்து புன்னகை செய்வதற்கு முயற்சிக்கிறார்கள்.

இருப்பினும் அவர்கள் பொருளாதார நெருக்கடிகள் மூலம் ஏற்பட்டுள்ள சவால்களுக்கு முகம் கொடுக்க முடியா மல் அவதியுறுகிறார்கள் என்பது அவர்க ளின் முகங்களை பார்க்கும் போது எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

மேலும் அவர்களை போலவே நாமும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கி றோம். இந்த பிரசார கூட்டத்திற்கு வருகை தந்து மீள வீட்டிற்கு செல்வதற்கு எனது வாகனத்திற்கு 10,000 ரூபாய்க்கு டீசல் நிரப்ப வேண்டி யுள்ளது. முன்னர் வாகனத்திற்கு 1,000 ரூபாய்க்கு டீசல் நிரப்பினால் ஹம்பாந்தோட்டைக்கே சென்று வரலாம்.

பொதுமக்கள் தமது அன்றாட அடிப் படை தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதில் பல்வேறு சிக்கல்களுக்கு முகங் கொடுத்துள்ளனர். அவ்வாறிருக் கையில் சுதந்திர தின நிகழ்வுகளுக்காக அரசாங்கம் 200 மில்லியன் ரூபாயை செலவிட்டுள்ளது.

இந்நிலையில் நாடு எதிர்கொண்டி ருக்கும் பொருளாதார நெருக்கடியில் மக்கள் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கின்றனரா?

இந்த நிதியினை நாடளாவிய ரீதியில் மருந்து தட்டுப்பாடு நிலவும் வைத்திய சாலைகளுக்கு மருந்து கொள்வனவுக்காக பயன்படுத்தி இருக்கலாம். நாட்டு மக்கள் துன்பத்தை அனுபவித்த உள்ள நிலையி லும் முன்னர் இருந்த ஆட்சியாளர்கள் போல

இன்றும் ஆட்சி உள்ளவர்கள் சுக போகமான வாழ்க்கையை அனுபவித்து கொண்டு குதுகலமாக இருக்கிறார்கள்.

இந்நிலையில் தற்பொழுது உள்ள ஆட்சியாளர்களிடம் நாட்டின் பொரு ளாதாரம் தொடர்பில் எந்தவொரு முறை யான நோக்கங்களும் திட்டங்களும் கிடையாது.

எதிர்காலம் தொடர்பில் நீண்ட தொரு ஸ்திரமான குறிக்கோள்களும் கிடையாது ஆனால் அவர்கள் அன்றும் இன்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சி னைகளுக்கு தற்காலிகமாக தீர்வு பெற் றுக் கொடுக்கும் செயல் முறையிலேயே ஈடுபட்டுள்ளார்கள் - என்றார். (ஐ)

## அரசியல்...

- இவ்வாறு மூத்த அரசியல் தலை வரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அண்மையில், திடீர் சுகவீனமுற்று கொழும்பில் தனியார் மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டிருந்த இரா. சம்பந் தன், கடந்த வெள்ளிக்கிழமை வீடு திரும்பினார். நேற்று அவரின் 90ஆவது பிறந்தநாளாகும். நேற்றைய தினம் அவரை தொடர்பு கொண்டு பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

அவருடன் செய்தியாளர் நடத்திய உரையாடல் அப்படியே தரப்படுகின் றது.

செய்தியாளர்- ஐயா! எப்படி இருக் கின்றீர்கள்?

சம்பந்தன்:- நான் நலமாக இருக்கின் றேன் தம்பி.

செய்தியாளர்:- பிறந்தநாள் வாழ்த்து கள் ஐயா.

சம்பந்தன்:- நன்றி தம்பி.

செய்தியாளர்:- ஐயா! இன்றைய நன்னாளில் தமிழ் மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

சம்பந்தன்:- இந்தப் புதிய வருடத்தில் அரசியல் தீர்வு சம்பந்தமான விடயத்தில் நாம் முழுஅர்ப்பணிப்புடன் செயல்படு கின்றோம். அரசியல் தீர்வு தொடர்பான எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

அதற்கேற்ற வகையில் புதிய அரச மைப்பு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்பட்டு மூன்றிலிரண்டு பெரும்பான் மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும். அதைப் பெறுவதற்கான வாய்ப்பும் இல்லாமல் இல்லை. எல்லோரும் சேர்ந்து அந்தக் கருமத்தை நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும்.

அரசியல் தீர்வு ஏற்படாவிட்டால் எங்களுடைய தாயகம் - சரித்திர ரீதி யாக எமது தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த பிரதேசங்கள் படிப்படியாக அபகரிக்கப் பட்டு விடும். அதை நாங்கள் அனு மதிக்க முடியாது. அரசியல் தீர்வு கிடைத்தால் எங்களுடைய பிரதேசங் களின் நிர்வாகங்களை நாங்களே பார மெடுத்து அவற்றை நடத்தக்கூடிய வழியேற்படும். எனவே, அரசியல் தீர்வு என்பது எங்களுடைய நீண்டகால இலக்கு மாத்திரம் அல்ல எங்களுடைய வாழ்வும் அதில்தான் தங்கியுள்ளது. (ஐ)

## சிறுபான்மை...

கலந்துரையாடினர் என்றும் இந் நிலையிலேயே ஏனைய கட்சிகளின் தலைவர்களுடனும் சந்திப்பு நடைபெற வுள்ளது எனவும் கூறப்பட்டது.

அண்மையில் இலங்கை வந்த அமெரிக்காவின் அரசியல் விவகாரங்க ளுக்கான துணைச்செயலர் விக்டோரியா நூலண்ட் மூவின மக்களின் பிரச்னைகள் தொடர்பில் கூட்டிணைந்து செயல்படு மாறு மேற்படி கட்சிகளின் பிரதிநிதி களை கூட்டாக சந்தித்தபோது கோரிய தோடு முதலில் காணி விவகாரம் சம்பந் தமாக கூட்டுப் பொறிமுறை யொன்றை அமுலாக்குமாறும் வலியுறுத்தியிருந் தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்த்...

தமிழரசு கட்சியின் தலைவரும் முன் னாள் பாராளுன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்து, தனித்து வாக்கு கேட்பதற்கு இந்தியா காரணமா என்று எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்தபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அண்மையில் இந்தியாவின் வெளி யுறவுத்துறை அமைச்சர் ஜெயசங்கர் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். அவர் இலங்கை அரசியலில் நீண்டகால அனுபவம் பெற்றவர். அவர் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை ஒருமித்தே சந்தித்திருந்தார்.

தமிழ் தேசிய கட்சிகள் இலங்கையி லும் சர்வதேசத்திலும் சுயநிர்ணய அடிப் படையில் சமஷ்டி கட்டமைப்பில் அரசி யல் தீர்வொன்று எட்டப்பட வேண்டும் என்று ஒருமித்து கோரிக்கை முன்வைத் துவரும் நிலையில் தான் ஜெயசங்கரும் அந்தக் கட்சிகளின் தலைவர்களை ஒரு மித்து சந்தித்துள்ளார்.

அதிகாரங்கள் பகிரப்பட்டு, அவை மீள எடுக்கப்படாத வகையில், இந்தியா விலுள்ள அரசியல் அமைப்பை போன்று இலங்கையிலும் உருவாக்கப்பட வேண் டும் என்பதே தமிழ் தேசிய கட்சிகளின் கோரிக்கையாக இருந்துள்ளது. இவ்வா றான பின்னணியில் இந்தியா பிரித்து செயற்படுகின்றது என்று கூறுவது பொருத்தமற்ற ஒன்றாகும் -அபத்தமா னது - என்றார். (ஐ)

# அரசமைப்பு பேரவை இன்று கூடுகின்றது!

கொழும்பு, பெப். 06

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர் தன தலைமையில் அரசமைப்பு பேரவை மூன்றாவது தடவையாக இன்று திங்கட் கிழமை மாலை 3 மணியளவில் பாராளு மன்ற கட்டடத் தொகுதியில் கூடவுள்ளது.

அரசமைப்பு பேரவை கடந்த ஜனவரி மாதம் 25 மற்றும் 30 ஆம் திகதிகளில் கூடியது. அரசமைப்பின் 21 ஆவது திருத் தத்தின் பிரகாரம் சுயாதீன ஆணைக் குழுக்களுக்கான உறுப்பினர் நியமனம் தொடர்பில் பேரவை ஆரம்பகட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இதற்கமைய சுயாதீன ஆணைக்குழுக் களுக்கான உறுப்பினர் நியமனத்துக்கு சிவில் பிரஜைகளிடமிருந்து விண்ணப் பம் கோரப்பட்டுள்ளது.

குறித்த விண்ணப்பங்கள் பத்திரிகை கள் கடந்த முதலாம் திகதி வெளியாகின. ஆணைக்குழு உறுப்பினர் விண்ணப் படிவம் பாராளுமன்ற உத்தியோகப்பூர்வ முகப்பு படிவம், பாராளுமன்ற உத்தி யோகப்பூர்வ இணையத்தள பகுதியில் வெளியாகியுள்ளன.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என அரசியலமைப்பு பேரவை அறிவித் துள்ளது. தேசிய தேர்தல்கள் ஆணைக் குழு, அரச சேவைகள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு,இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு,நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக் குழு, மற்றும் தேசிய பெறுகை ஆணைக் குழு ஆகிய ஆணைக்குழுக்களுக்கு தகுதி வாய்ந்த தரப்பினரிடமிருந்து விண்ணப் பம் கோரப்பட்டுள்ளன. (ஐ)

## ராஜபக்ஷ...

- இவ்வாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் தவறான கொள்கைகளைப் பின்பற்றி நாட்டின் பிரச்னைகளைத் தீர்க்க முயற்சிக்கிறது. இவர்களின் இத்தகைய செயல்பாடுக ளால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் அதிகரித்துள்ளன.

ராஜபக்ஷ குடும்பம் இந்நாட்டை அழித்து வறிய நிலைக்கு இட்டுச் சென் றது. இதனால், சிறு குழந்தை முதல் முதியவர் வரை, அரச ஊழியர் முதல் கூலித் தொழிலாளி வரை அனைவரின தும் இயல்பு வாழ்க்கை வீழ்ந்துள்ளது. இந்நாட்டின் 220 இலட்சம் மக்கள் இனி எந்த ஆட்சியாளருக்கும், தலைவருக்கும், அரசியல்வாதிகளுக்கும் அடிமைகள் அல்லர்.

உலகில் எந்த நாடும் பொருளாதா ரத்தை சுருக்கி பிரச்னைகளை தீர்த்ததாக இல்லை. தற்போதைய அரசாங்கம் பொருளாதாரத்தை சுருக்கி நாட்டு மக்களை அழிக்க முயல்வதாகவும், தேவையை குறைப்பதன் மூலம் நாட் டின் பிரச்னைகள் தீர்ந்துவிடும் என்று நினைக்கிறார்கள் என்றாலும், அது தவறு எனவும், இந்த பொருளாதார மற்றும் சமூக வீழ்ச்சியிலிருந்து மீள்வ தற்கு பொருளாதாரத்தை விரிவு படுத்துவதே ஒரே தீர்வு.

2019 இல் ஒரு தவறு செய்யப்பட்ட தாகவும், 2023 இல் மக்கள் மற்றொருவ ருக்கு பின்னால் ஓடுவதாகவும் இந்நாட் களில் பொய் சொல்லி தம்பட்டம் அடிக் கும் புரட்சியாளர்களுக்கு சர்வதேச ஆதரவு கிடைக்காது எனவும், எமது நாட்டை கட்டியெழுப்ப வேண்டு மானால் அபிவிருத்தியடைந்த நாடுகளு டன் வர்த்தகம் செய்யும் திறன் வேண் டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## ரூ.77கோடியை...

எனவே, இந்த மாதத்துக்குள் நிதியை மொத்தமாகவோ அல்லது பகுதியாக வோ வழங்குமாறு நிதி அமைச்சிடம் தேர்தல் ஆணைக்குழு கேட்டுள்ளது. (ஐ)

## ஜனாதிபதி...

நவம்பர் மாதம் வவுனியாவுக்கு வருகை தந்தபோதே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். அத்துடன், தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பின் போதும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி இந்த உத்தரவை செயல்படுத்தப் பணித்திருந்தார். ஆனால், தற்போது வரை இந்தப் பணிப்புரை நிறைவேற்றப் படவில்லை.

இதேநேரம், பொதுமக்களுக்கு சொந்தமான காணிகளை விடுவிப்பதற்கு தொல்பொருள் திணைக்களம் அனுமதி அளித்துள்ளபோதும், அதில் ஐந்து ஏக்கர் காணியை சுவீகரிக்க திட்டமிடப் படுகின்றது என்று அறிய வருகின்றது.

இதேநேரம் வனத்துறைக்கு சொந்த மான 78 ஏக்கர் காணியையும் தம்வசப் படுத்த தொல்பொருள் திணைக்களம் திட்டமிட்டு வருகின்றது. இந்த செயல் பாடுகளை தொல்பொருள் திணைக் களத்தின் பிராந்திய உதவிப் பணிப்பா ளரே முன்னெடுக்கிறார் என்றும் அறிய வருகின்றது.

இதேநேரம், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க. விமலநாதன், ஜனாதிபதி ரணிலின் பணிப்புரையை நடைமுறைப்படுத்த தனக்கு ஒதுக்கப் பட்ட அதிகாரங்களின் கீழ் நடவடிக்கை களை எடுத்து வருகிறார் என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தேர்தலைக் கண்டு அஞ்சவில்லை செலவுகளுக்கே அச்சமடைகிறோம்!

## இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய



கொழும்பு, பெப். 06

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடும் பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் யோசனை அரசாங்கத்துக்கு கிடையாது. தேர்தலுக்கு அஞ்சவில்லை, தேர்தல் செலவுக ளுக்கு அச்சமடைகிறோம் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊட கங்களுக்கு கருத்துரைக்கை யில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்கூறுகையில், அரச செலவுகளை கட்டுப்படுத்தும் வகையில் சகல அரச நிறுவனங்க ளுக்கும் விசேட சுற்று நிருபணங் கள் வெளியிடப்பட்டுள்ளன. அமைச்சுகளின் செலவுகளை குறைப்பதற்கும் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. செலவு களை மட்டுப்படுத்த அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகள் தற்போது வெற்றியடையடைந் துள்ளன.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண அரசாங்கம் விசேட அவதானம் செலுத்தியுள்ளது. சிறந்த முகாமைத்துவத்தால் எரிபொருள் மற்றும் எரிவாயு ஆகியவற்றுக்கான வரிசை யுகம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள் ளன. நாட்டின் நிதி நிலைமையை கருத்தில் கொண்டு அனைத்து தீர் மானங்களும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் சிவில் பிரஜை ஒருவர் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எழுத்தாணை மனுவில் நிதியமைச் சின் செயலாளர் பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ளது. நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் நிதிய மைச்சின் செயலாளர் உயர்நீதி மன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலை பிற்போடும் வகையில் அரசாங்கம் பாராளுமன்றத்தின் ஒரு பிரேர ணையை கொண்டு வர தீர்மானித் துள்ளதாக வெளியாகியுள்ள செய்தி அடிப்படையற்றதாகும். தேர்தலை அஞ்ச வேண்டிய தேவை எமக்கு கிடையாது, இருப்பினும் தேர்தல் செலவுகளை கண்டு அச்சமடைகி றோம்.

நாணயம் அச்சிடுவதற்கு மட்டுப்பாடுகள் காணப்படுகின்ற நிலையில் அரச செலவுகள் இயலு மான அளவு கட்டுப்படுத்தப்பட் டுள்ளன. இவ்வாறன பின்னணியில், தேர்தலுக்காக நிதி அச்சிட்டால் பணவீக்கம் மீண்டும் உயர்வ டைந்து பொருளாதார பாதிப்பு மேலும் தீவிரமடையும் - என்றார். (ஐ)

# மதுவரி திணைக்களம் அருகே மதுபானம் விற்றவர் கைதானார்!



சாவகச்சேரி, பெப். 06

சாவகச்சேரி நகரில் மதுவரித்திணைக்களத்துக்கு அருகாமையில் போயாதினமான நேற்று மதுபான வகைகளை விற்பனை செய்தவர் கைது செய்யப்பட் டுள்ளார்.

கைதானவர், 30 வயதான அதே இடத்தைச் சேர்ந்தவ ராவார். மதுவரி திணைக்களத்துக்கு அருகாமையில் உள்ள வீட்டில் சாராயம் மற்றும் பியர் விற்பனையில் இவர் ஈடுபட்டு வந்துள்ளார். இது தொடர்பில், யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து அந்த வீட்டை முற்றுகை யிட்ட பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து அதிக அளவு சாராய பொருட்கள் மற்றும் பியர் ரின்கள் கைப்பற் றப்பட்டுள்ளன. (ஐ-03)

# தந்தை மகள் உட்பட மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்

புத்தளம், பெப். 06

முகத்துவாரத்தில் நீராடிய தந்தையும் மகளும் மற் றொரு சிறுவனுமாக மூவர் உயிரிழந்தனர்.

சிலாபம் - முகத்துவாரப் பகுதியில் நேற்று ஞாயிற் றுக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், 35 வயதான தந்தை, 7 வயது மகள் இவர்க ளின் உறவினரான 6 வயது சிறுவன் ஆகியோரே உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு பிரதேசத்தில் வசித்துவந்த இவர்கள் சுற்றுலாவுக்காக சிலாபம் வந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ஐ)

# லாப்ஸ் எரிவாயு விலை இன்று திருத்தப்படும்!

கொழும்பு, பெப். 06

லாப்ஸ் எரிவாயு நிறுவனத்தின் விலை திருத்தம் குறித்து இன்று திங்கட்கிழமை முடிவு செய்யப்படும் என்று நிறுவனத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிறுவனத்தின் 12.5 கிலோ எடை கொண்ட சிலிண்டரின் சில்லறை விலை ரூ.5,080 ஆக உள்ளது. உலக சந்தையில் நிலவும் விலை உயர்வுக்கு ஏற்ப முடிவு எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதேசமயம், நேற்று லிட்ரோ எரிவாயு தனது எரி வாயுவின் விலையை அதிகரித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (ஐ)

# சிற்றுண்டி விலை; இன்று இறுதி முடிவு

கொழும்பு, பெப். 06

சிற்றுண்டி உற்பத்திகளின் விலை திருத்தம் தொடர் பான இறுதி தீர்மானம் இன்று திங்கட்கிழமை எடுக்கப் படும் என்று அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

சமையல் எரிவாயு விலை அதிகரித்தமையால் தமது உற்பத்திகளின் விலையை அதிகரிக்க நேர்ந்துள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார். (ஐ)





தைப் பூசத் திருநாளான நேற்று சரித்திர பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் முருகப் பெரு மான் வள்ளி - தெய்வானை சமேதரராக மஞ்சத்தில் எழுந்தருளியபோது...! (படங்கள் : ஐ.சிவசாந்தன்)

# விரைவில் மலையகத்தில் 10 ஆயிரம் வீட்டுத் திட்டம்



## அமைச்சர் ஜீவன் தொண்டமான்

பண்டாரவளை, பெப். 06

மலையகத்துக்கான இந்திய அரசின் 10 ஆயிரம் வீட்டுத்திட்டம் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படும். கட்சி, தொழிற்சங்க பேதங்களின்றி பயனாளிகளுக்கு உரிய வகையில் வீடுகள் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்ட மைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித் தார்.

அத்துடன், சவாலை எதிர் கொள்ள வேண்டுமெனில் களத்தில் இறங்கியாக வேண்டும். நெருக் கடியை கண்டு பின்வாங்கி நிற்பது ஏற்புடையதல்ல. அதனால்தான் நெருக்கடியான சூழ்நிலையில் அமைச்சு பதவியை ஏற்றேன். மாறாக பதவி ஆசையில் அல்ல.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிர ஸின் தேர்தல் பிரசார ஆரம்பக் கூட்டநேற்று அவர் தலைமையில் ஆரம்பமானது. இதிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் உள்ளூ ராட்சி சபைத் தேர்தல் அவசியமா? அதனால் மாற்றம் ஏதும் ஏற்படுமா? தேர்தல் முடிவுகள் வந்த பிறகு ஜனாதி பதியாக ரணிலே இருப் பார். பிரதமராக தினேஷ் குணவர்த்தனவே செயல்படுவார்.

அமைச்சரவையிலும் மாற்றம் வராது. நான் தேர்தலுக்கு எதிரான வன் அல்லன். தேர்தலொன்று நடைபெறுமானால் அது ஜனாதி பதி தேர்தலாகவே இருக்க வேண்டும்.

கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகிய பின்னர், சஜித், ரணில் என இருவருக்கும் பதவியேற்க அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால், சவாலை ஏற்றால் அரசியல் எதிர்காலம் இல்லாது போய்விடும் என்பது இருவருக்கும் தெரியும். சஜித் பின் வாங்கினார். ரணில் சவாலை ஏற்றார்.

நாட்டில் 6 மாதங்களுக்கு முன் னர் இருந்த நிலைமை தற்போது இல்லை. அதேபோல ஒரே இரவில் மாற்றத்தை ஏற்படுத்திவிடவும் முடியாது. உடைப்பது இலகு. கட்டுவதுதான் கஷ்டம். இந்தியா உட்பட பல நாடுகள் உதவிவரு கின்றன. சர்வதேச நாணய நிதியத்தி டம் கடன் கிடைப்பதற்கு நிதி உத்தரவாதம்கூட வழங்கப்பட்டுள் ளது.

நெருக்கடியான கட்டங்களில் பதுளை மாவட்டமும் காங்கிரஸை தோளில் சுமந்துள்ளது. அந்த மண்ணை மறக்கமாட்டோம். தேர் தல் பிரச்சாரத்தை, எவரையும் கொச்சைப்படுத்தும் வகையில் முன்னெடுக்காமல், நாகரிகமாக முன்னெடுங்கள்." - என்றார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.